விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 037 வள்ளுவர் ஆண்டு 2054 தை 11 புதன்கிழமை (25.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## காரில் பயணித்தவர்கள் மீது சரமாரியாக வாள்வெட்டு

சினிமாப் பாணியில் சுன்னாகத்தில் பயங்கரம்

06 ஆம் பக்கம் பார்க்க

## அரச ஊழியர்களின் இடமாற்றங்கள் இரத்து

தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

14 ஆம் பக்கம் பார்க்க

சுதந்திர தினம் தமிழரின் கரிநாள்

## பெப்ரவரி 4 மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியில் ஒன்றுகூடுங்கள்

### யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திர நாள் தமிழர்களுக்கு கரிநாள் எனத் தெரிவித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பெப்ரவரி 4ஆம் திகதி தமிழர் தாயகம் எங்கும் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை புறக்கணித்து மக்கள் எழுச்சிப் பேரணியில் ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பிலேயே இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர்,

ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்திருந்தாலும் தமிழ் மக்களாகிய 15

## அம்புலன்ஸ் மோதியதில் 9 வயது சிறுவன் பலி

பூநகரியில் சம்பவம்



(பூநகரி)

அம்புலன்ஸ் மோதியதில் 9 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

பூநகரி செம்மண் குன்றுப் பகுதியில் 15

# பணம் கிடைக்காவிட்டால் 12 மணி நேரம் மின்வெட்டு

## அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு பணம் கிடைக்காவிட்டால் மீண்டும் பத்து அல்லது 12 மணித்தியாலங்களுக்கு மின்சாரத்தை துண்டிக்க நேரிடும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

மாணவர்கள் நலன் கருதியே

## 2 மணித்தியாலங்கள் மட்டும் மின்வெட்டு

அமைச்சர் பந்துல

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நலன் கருதி மின்வெட்டு நேரத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அமைச் 15

## சுன்னாகத்தில் வாள்வெட்டு ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின் 15

## முறையற்ற விதத்தில் முதல்வர் தெரிவு மணிவண்ணனால் வழக்குத் தாக்கல்

### இன்று வழக்கு விசாரணை

(யாழ்ப்பாணம்)

முறையற்ற விதத்தில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வராக மீண்டும் இம்மானுவேல் ஆனல்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கு எதிராக சட்டத்தரணி மணிவண்ணனால் நேற்று யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மூன்று விடயங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கு செய்யப்பட்டுள்ளதோடு இன்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

தேர்தல் கட்டளைச் சட்டத்தின்படி ஒரு முதல்வரை தேர்வு செய்ய 15

## காரைநகரில் சாரதி, நடத்துநர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் - நீலங்காடு பகுதியில் அரச பேருந்து மீது தாக்குதல் நடத்தியதுடன் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 15

தேர்தலுக்கான பணம் வழங்க முடியுமா?

## தேர்தல்கள் ஆணைக்குழு நிதி அமைச்சுக்கு கடிதம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான பணத்தை வழங்க முடியுமா? இல்லையா? என்பதை அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு நிதி அமைச்சுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் தலைவர் 15

வரிகள் குறைக்கப்பட்டால்

## சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கிடைக்காது

(கொழும்பு)

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வரி அதிகரிப்பு முறைமைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைப் பெற்றுக் கொள்ள முடியாது.

துரதிர்ஷ்டவசமாக சர்வதேச நாணய நிதியம் கடனுதவிக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால் நாட்டுக்கு நாளை என்ற ஒன்று இருக்காது என்று 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துக

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்



(யாழ்ப்பாணம்)

இந்திய கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் மாவட்டங்கள் அனைத்திலும் பாதுகாப்பு பொறிமுறையொன்றை உடன் அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்துமாறும் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்து மீறலை பூரணமாக கட்டுப்படுத்துவது தொடர்பாக கடற்படை மற்றும் சம்பந்தப்பட்ட கடற்றொழில் அதிகாரிகளுடன் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போன்ற குறுகிய அரசியல் நோக்கங் கொண்டவர்களினால் இந்திய கடற்றொழிலாளர்களின் விவகாரத்தை தவறாக பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நாடுகளுக்கிடையேயான அசௌகரியங்களை உருவாக்கக்கூடிய எந்தவித மான செயற்பாடுகளையும் அனுமதிக்க முடியாதென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப் படகுகள் எமது கடற்பரப்பிற்கு வருகின்ற நிலையில் கடற்படையினரின் நடவடிக்கை போதுமானதாக இல்லை எனவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்படை அதிகாரி, சீரற்ற காலநிலை போன்ற காரணங்களினால் கடந்த மாதங்களில் கடற்படை செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்ததாகவும் எதிர்வரும் வாரங்களில் நடவடிக்கை விரைவுபடுத்தப்படும் எனவும் உறுதியளித்தார்.

மேலும், உள்ளூர் கடற்றொழிலாளர்களினால் மேற்கொள்ளப்படும் அனைத்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதுடன் கடத்தல் நடவடிக்கைகளில் கடற்றொழிலாளர்கள் சம்பந்தப்படுவதையும் கட்டுப்படுத்த வேண்டியிருக்கின்றது.

எனவே, கடற்றொழில் மாவட்டங்கள் தோறும் ஆலோசனைக் குழுக்களை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்குழுக்களில் கடற்றொழில் அமைச்சின் உயரதிகாரிகள், கடற்படையின் உயரதிகாரிகள் மற்றும் கடற்றொழில் சம்மேளனப் பிரதிநிதிகளை இக்குழுவில் உள்ளடக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

# தேர்தலுக்கு தயாராகுங்கள்

## ஐ.தே.கவிற்கு ரணில் அறிவிப்பு!

(கொழும்பு)

தேர்தலுக்கு தயாராகுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு நேற்று அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாக சபைக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.


தேர்தல் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன, பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார மற்றும் தலைவர் வஜிர அபேவர்தன ஆகியோர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாக சபை இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டது. (ம-7)

# சுன்னாக வாள் வெட்டுடன் தொடர்புடையோரை கைது செய்க

## வடக்கு பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)



சுன்னாகத்தில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை உடனடியாக கைது செய்யுமாறு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ண உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சுன்னாகம் பகுதியில் நேற்று மதியம் சினிமா பாணியில் இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டோரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்மகிந்த குணரட்ண யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு குழுக்களுக்கு இடையில் நீண்ட காலமாக இடம் பெற்று வரும் முரண்பாட்டின் காரணமாகவே நேற்றையதினம் இந்த வாள்வெட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

எனினும் பட்டப்பகலில் பொதுமக்கள் பார்த்திருக்க இந்த சம்பவம் இடம் பெற்றதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே உடனடியாக தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளதோடு குறித்த தாக்குதல் சம்பந்தமான பூரண அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறும் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (ம-7,33,104)

# மரண தண்டனை கைதி 11 ஆண்டுகளின் பின் கைது

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர் தலை மறைவாகியிருந்த நிலையில் சுமார் 11 ஆண்டுகளின் பின் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபர் 2000 ஆம் ஆண்டு ஹெரோயினுடன் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு, அவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இதன்போது, சந்தேக நபருக்கு பிணை வழங்கப்பட்ட பின்னர் அவர் வழக்குக்கு ஆஜராகவில்லை. இதன்படி, அவரை கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர் இல்லாத நிலையில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு, அதன் பிரகாரம் 8 மே 2012 அன்று உயர் நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்து திறந்த பிடியாணை பிறப்பித்தது.

இதேவேளை, சந்தேக நபர் நேற்று முன்தினம் அத்தன கல்ல கஹடோவிட்ட பகுதியில் பதுங்கியிருந்தபோது பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை இன்று கொழும்பு மேல் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 25 - 02 - 1950

மறைவு 28 - 12 - 2022

## அமரர் நடராசா சிவரட்ணம்

[ஓய்வு நிலை உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி - வடமாகாணம், பொதுமுகாமையாளர் V2 Travls & Tours PVT LTD]

ஆதி கோவிலடி வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், முருகையன் கோவிலடி வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவரட்ணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 27.01.2023 வெள்ளிக்கிழமை அன்று மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அந் நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக மனமுவந்து ஏற்றுக்கொள்ளவும்)

மேலும் அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும், பதாகைகள், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

முருகையன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

(C 5844)

- குடும்பத்தினர்
077 236 7407

## ஆலய நித்திய பூசகர் தேவை

அச்சுவேலி பத்தமேனி ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு நித்திய பூசகர் தேவை.

தொடர்புகளுக்கு :-
பொன்னையா செல்வராசா (ஆலய தர்மகத்தா)

077 314 4803

(C 5842)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடனில் உள்ள இலங்கைக்கு உதவ இந்தியா உறுதியளித்துள்ளது

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**சர்வதேச நாணய நிதிய ஆதரவு திட்டத்தின் ஒரு பகுதியாக, பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள அண்டை நாடான இலங்கையின் கடன் சுமையை குறைக்க இந்தியா உறுதியளித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

இலங்கை கடனாக 2.9 பில்லியன் டொலரைக் கோருகின்ற நிலையில், இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வலுவாக ஆதரிப்பதாக இந்தியா, சர்வதேச நாணய நிதியத்திடம் கூறியதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

இந்நிலையில் மற்ற இரு தரப்பு கடன் வழங்குநர்களுடன் இதேபோன்ற உத்தரவாதங்களை பெற்றுக்கொள்ள பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. அதன்படி, இலங்கை பாரிஸ் கிளப் உறுப்பினர்களான இந்தியா, ஜப்பான், சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது.

ஏற்கனவே ஜப்பானுடன் பேச்சுவார்த்தைகளை முடித்துவிட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ள அதேவேளை, பாரிஸ் கிளப் உறுப்பினர்களுடன் இந்த வாரம் ஒரு சுற்று பேச்சுவார்த்தை நடத்தப்படும் என நிதி அமைச்சு உறுதிப்படுத்தியது.

அவர்களிடம் இருந்து போதுமான உத்தரவாதங்கள் பெறப்பட்டு, மீதமுள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன், கடனுதவி திட்டத்தை பரிசீலிக்கும்படி சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு தசாப்தங்களில் ஏற்பட்ட மோசமான நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அவசியமான சர்வதேச நாணய நிதியத்துடன் இறுதி உடன்படிக்கையை எட்டுவதற்கு, சீனா மற்றும் இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கு தேவைப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

# விமானப்போக்குவரத்து கட்டணத்தில் திருத்தம்-அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

கொழும்பு விமானத் தகவல் வலயத்தின் ஊடாகப் பறக்கும் சர்வதேச விமானங்களுக்கு விதிக்கப்படும் விமானப் போக்குவரத்துக் கட்டணத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் விமான நிலையம் மற்றும் ஏவியேஷன் சர்வீசஸ் பிரைவேட் கம்பனி லிமிடெட் செய்த கட்டணங்கள் திருத்தப்படவில்லை என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, தற்போது அறவிடப்படும் கட்டணத்தை பெப்ரவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தியமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

# தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்?

(கொழும்பு)

இன்னும் சில தினங்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக இன்று புதன்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அரசியலமைப்பு சபை கூடவுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக தேர்தலினை ஒத்திவைக்கும் வகையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுவதாக சில அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இது தவிர ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் அடுத்த சில நாட்களில் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அரசியலமைப்பு பேரவைக்கு பிரதான எதிர்க்கட்சியல்லாத ஏனைய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் நியமிக்கப்படவில்லை எனவும், இது தொடர்பில் இன்று நடைபெறும் கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணியிடம் பத்து இலட்சம் பணம் கொள்ளை

(கொழும்பு)

வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவரிடமிருந்து பத்து இலட்சம்ரூபாய்பணம்கொள்ளையிடப்பட்டுள்ளது.

சுற்றுலா மேற்கொண்டு இலங்கை வருகை தந்த கட்டாரைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி ரயிலில் பயணித்த போது பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர் மற்றும் கட்டார் ரியால் உள்ளிட்ட நாணயத்தாள்கள் அடங்கிய சுமார் பத்து இலட்சம் இலங்கை ரூபாய் மதிப்புடைய பணம் இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

அத்துடன் மடிக்கணனி, பவர் பேங்க் உள்ளிட்டவை அடங்கிய பயணப்பையையும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் வெளிநாட்டுப் பிரஜை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நபரிடமிருந்து பணம் கொள்ளையிட்ட நபரை அடையாளம் கண்டு, கைது செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தியதலாவ பொலிஸார் தெரிவிக்கின்றனர். (நி)

# அடுத்த 6 மாதங்களில் கடன் மறுசீரமைப்பு நிறைவடையும்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த 6 மாதங்களில் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் நிறைவடையும் என நம்புவதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீள செலுத்துவோம் என்றும் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு இந்தியா ஆதரவளிப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ள நிலையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (நி)



# மக்கள் விரோத நடவடிக்கைக்கு எதிராக மீண்டும் மாபெரும் போராட்டம்

## தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் கூட்டணி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 9 ஆம் திகதி தேசிய எதிர்ப்பு தினத்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டணி தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனை தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பிழைப்புக்காக மேற்கொள்ளப்படும் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக தேசிய எதிர்ப்பு தினத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் இணைந்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி போராட்டத்தை நடத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இதன்போது தெரிவித்தார். (நி)

# தேர்தல் செலவுக்காக பணம் அச்சடித்தால் பொருட்களின் விலைகள் இரட்டிப்பாகும்

## நிதியமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தல் செலவுக்காகப் புதிதாக பணம் அச்சடிக்க வேண்டிவரும் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ்வாறு பணம் அச்சடித்தால் பொருட்களின் விலைகள் இரண்டு மடங்கு அதிகரிக்கும் என்றும் பணவீக்கம் மேலும் உயரும் என்றும் நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

தேர்தல் செலவுக்காக ஆயிரம் கோடி ரூபாவைத் தேர்தல்கள் ஆணைக்குழு கோருகின்றது. இதற்கும் பணமில்லை என்று, அரசு கூறி வருகின்றது.

இருந்தும், 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இதற்கான பணம் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மின் கட்டண திருத்தத்திற்கு ஆணைக்குழு இணக்கம்

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டு மின் சக்தி சட்டத்திற்கு அமைய கோரப்பட்டுள்ள மின் கட்டண திருத்தத்திற்கு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ஏகமனதாக இணக்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள மின் கட்டண திருத்தத்தின் ஏனைய விடயங்கள் தொடர்பில் சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானமானது தமது ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களினாலும் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானம் என அவர் தெரிவித்தார்.

மின் கட்டணத்தை 65 முதல் 70 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அண்மையில் தீர்மானித்தது.

இந்தத் தீர்மானம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமென வும் அமைச்சரவை குறிப்பிட்டிருந்தது.

எவ்வாறாயினும், இவ்வாறு மின் கட்டண அதிகரிப்பிற்கான அனுமதியை வழங்க முடியாதென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும், மின்சார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின் கட்டணத் திருத்தம் தொடர்பான கணக்கீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி)

# வேலையற்றோர் அதிகரிப்பு


(கொழும்பு)

நாட்டில் வேலையற்றோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என மனித வள மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் சிசிர குமார தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரை 4 இலட்சத்து 50 ஆயிரம் வேலையற்றோர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் சுப்பர் லீக் பெப்ரவரி 13 ஆம் திகதி



பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் எட்டாவது அத்தியாயம் எதிர்வரும் பெப்ரவரி 13 ஆம் திகதி ஆரம்பமாகும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு இறுதிப் போட்டியாளர்களான லாகூர் கலாண்டர்ஸ் மற்றும் முல்தான் சுல்தான்ஸ் அணிகள், ஆரம்பப் போட்டியில் முல்தான் கிரிக்கெட் விளையாட்டரங்கில் மோதும்.

கடந்த ஆண்டு இறுதிப் போட்டியில் சுல்தான் அணியை 42 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து லாகூர் கலாண்டர்ஸ் முதல் முறையாக சம்பியன் பட்டத்தை வென்றது. இம்முறை 34 போட்டிகள் கொண்ட இத்தொடர், கராச்சி, லாகூர், முல்தான் மற்றும் பெஷாவர் ஆகிய நகரங்களில் நடைபெறுகிறது.

கராச்சி மற்றும் லாகூர் நகருக்கு செல்லும் முன் முல்தான் மற்றும் பெஷாவர் பெப்ரவரி 13 முதல் 26 வரை போட்டிகளை நடத்தும். தகுதிச் சுற்று, இரண்டு வெளியேற்றுப் போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டி (மார்ச் 19) லாகூரில் உள்ள கடாபி மைதானத்தில் நடைபெறும்.

அடில் ரஷீத், மேத்யூ வேட், வனிந்து ஹசரங்க, பானுக ராஜபக்ஷ, ஜிம்மி நீஷம் மற்றும் டப்ரைஸ் ஷம்சி ஆகியோர் முதல் முறையாக இந்த தொடரில் விளையாடவுள்ளனர்.

மேலும், எதிர்காலத்தில் பாகிஸ்தான் மகளிர் லீக்கை ஆரம்பிப்பதற்கான முயற்சியில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, மகளிர் கிரிக்கெட் வீராங்கனைகள் பங்கேற்கும் மூன்று கண்காட்சி போட்டிகளை ராவல்பிண்டியில் மார்ச் 8, 10 மற்றும் 11 ஆகிய திகதிகளில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இரண்டு மகளிர் அணிகளிலும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வீரர்கள் இருப்பார்கள். (4)

## ஆஸி பகிரங்க டென்னிஸ்

# காலிறுதிக்குள் கரேன்



ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான காலிறுதிப் போட்டியில், ரஷ்யாவின் கரேன் கச்சனோவ் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆண்களுக்கான முதல் காலிறுதிப் போட்டியில், ரஷ்யாவின் கரேன் கச்சனோவ், அமெரிக்காவின் செபாஸ்டியன் கோர்டாவை எதிர்கொண்டார்.

இப்போட்டியில், கரேன் கச்சனோவ், 7-6, 6-3, 3-0 என்ற செட் கணக்கில் கரேன் கச்சனோவ் முன்னிலை பெற்றிருந்த போது, செபாஸ்டியன் கோர்டா உபாதை காரணமாக போட்டியின் இடைநடுவே வெளியேறினார்.

இதனால், ரஷ்யாவின் கரேன் கச்சனோவ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு அவர் காலிறுதிக்கு முன்னேறினார். (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2752


சுகன்யா




மேனன்




கம்சிகா




பவித்திரன்




மிதுனாளினி




நிக்ஷன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கடன்களை ரத்து செய்யுமாறு
## பொருளாதார வல்லுநர்கள் விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

(கட்டார்)

**உலகெங்கிலும் உள்ள 180 இற்கும் மேற்பட்ட முக்கிய பொருளாதார வல்லுநர்கள் மற்றும் அபிவிருத்தி நிபுணர்கள் இலங்கையின் நிதிக் கடன்கள் ரத்துச் செய்யப்பட வேண்டும். இதுவே, இலங்கையின் வளர்ச்சிக்கு உதவும் என்று பல்வேறு நாடுகளை சேர்ந்த 180 பொருளாதார வல்லுநர்களும், நிபுணர்களும் சுட்டிக் காட்டியிருந்தனர்.**

எனினும், பொருளாதார நிபுணர்கள் இந்த கோரிக்கையை நிராகரித்துள்ளதாக அல் ஜசீரா செய்தித் தொகுப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

உலக வங்கியின் மதிப்பீட்டின்படி, கடந்த டிசெம்பர் மாத நிலவரப்படி இலங்கையின் வெளிநாட்டுக் கடன் சுமை 52 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமானதாகும்.

அதில், கிட்டத்தட்ட 40 சதவீதம் நிதி நிறுவனங்கள் உட்பட தனியார் கடன்களாகும். மீதமுள்ளதில் 52 வீதம் சீனாவிடம் இருந்த பெற்றக்கடன்களாகும்.

ஜப்பானிடம் இருந்து 19 சத வீத கடனை இலங்கை பெற்றுள்ளது. இந்தியாவிடம் இருந்து 12 சதவீத கடனை இலங்கை பெற்றுள்ளது.

இந்த நிலையில் பெஸ்ட் செல்லர் கெப்பிட்டல் நூலை எழுதிய தோமஸ் பிகெட்டி, ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தின் பொருளாதார நிபுணர் டானி ரோட்ரிக் மற்றும் இந்தியப் பொருளாதார நிபுணர் ஜெயதி கோஷ் உட்பட பல முக்கிய கல்வியாளர்கள் மற்றும் பொருளாதார வல்லுநர்கள் இலங்கையின் கடனை அனைத்து வெளி கடனாளிகளாலும் இரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

எனினும் கடன்கள் ரத்துச் செய்யப்பட்டால், அது அதிக வட்டிகளுக்கு கடன்களை பெற்ற ஊழல் அரசியல்வாதிகளுக்கே வாய்ப்பாக அமையும் என்று ஏனைய பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

வாக்காளர் ஒருவருக்கு

## 15 ரூபாய் மட்டுமே செலவழிக்க முடியும்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்களும் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர் ஒருவர் சார்பாக 15 ரூபாயை மட்டுமே வேட்பாளர் செலவு செய்ய முடியும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (நி)


## பெயர் மாற்றம்

இல: 32, சிங்கம் லேன், உடுவிலில் வசிக்கும் எனது பெயரானது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் லில்லி நிமெல்டா என பதியப்பட்டுள்ளது.

அப் பெயரை லில்லி ஹிமெல்டா என பெயர் மாற்றம் செய்கின்றேன் என இலங்கை சனநாயகக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

25.01.2023 உண்மையுள்ள லில்லி ஹிமெல்டா (4386)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்,
கடந்த 26.12.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்



அமரர்.பொன்னுச்சாமி நந்தகுமார்
(நந்தன் கபே & கூல்பார் உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 23.01.2023
திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை
புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள்
25.01.2023 புதன்கிழமை காலை 11.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து
அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன
நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம். (4387)

ஏழாலை வடக்கு, ஏழாலை.
தொ.இல—076 672 5626,077 219 3149

இங்ஙனம்
குடும்பத்தினர்.


# இராசிபலன்

25.01.2023
தை 11,புதன்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 6.54 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 2.17 மணிவரை

சுபநேரம்-5.06-6.36 மணிவரை
இராகுகாலம்-12.36-2.06 மணிவரை
அமிர்சித்தம்,சதுர்த்தி விரதம்,
சந்திராஷ்டமம்

ஆயிலியம்,
மகம்

வளவன்




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.




மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாக சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள்.




செய்தொழில் மேன்மையுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உறவினர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




உறவினர்களின் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.




செய்தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், வழிபாடு மகத்துவம் தரும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.




நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கௌரவமான சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.




உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்




உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


வாழ்வின் வெற்றி என்பது வாழும் விதத்தில் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண்டகால முரண்பாடு

# காரில் பயணித்தவர்கள் மீது சரமாரி வாள்வெட்டு !

### சுன்னாகத்தில் நேற்று பயங்கரம்





(யாழ்ப்பாணம்)

கார் ஒன்றினை துரத்தி வந்து பட்டா வாகனத்தால் மோதி விபத்தினை ஏற்படுத்தி காரில் பயணித்தவர்கள் மீது சரமாரியான வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதல் சம்பவ த்தில் காரில் பயணித்த நால்வர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,சுன்னாகம் பகுதியில் சன நடமாட்டம் அதிகமாக இருந்த நேரத்தில் வேகமாக வந்த காரினை பின் தொடர்ந்து துரத்தி வந்து பட்டா வாகனத் தால் மோதி விபத்தினை ஏற்படுத்தி பட்டா வாகனத்தில் வந்தவர் கள் காரில் இருந்தவர்கள் மீது சரமாரியாக வாள்வெட்டு தாக்கு தலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்தவர்கள் அங்கிருந்து மீட்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் செயற்படும் இரண்டு குழுக்களுக்கு இடையில் நீண்ட காலமாக இடம் பெற்று வரும் முரண்பாட்டின் காரணமாகவே இந்த வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது

எனினும் பட்டப்பகலில் பொது மக்கள் பார்த்திருக்க இந்த சம்பவம் இடம்பெற்றதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவே உடனடியாக தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளதோடு குறித்த தாக்குதல் சம்பந்தமான பூரண அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளதாகவும் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் உத்தர விட்டுள்ளார் (4-6-33)

# முன்பள்ளிகளை மேம்படுத்த நகர சபை முயற்சிக்க வேண்டும்

### சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் கீழ் இயங்குகின்ற முன்பள்ளிகள் இரண்டினதும் வசதி வாய்ப்புக்களையும் மேம்படுத்த நகரசபை முயற்சிக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் இதனை வலியுறுத்தினர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் சாவகச்சேரி நகரசபை தமது முன்பள்ளிகள் இரண்டினதும் தரம் தொடர்பாக ஆராய்ந்து உரிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். கல்வி வலயத்தின் கீழ் இயங்குகின்ற முன்பள்ளிகள் அனைத்தும் உரிய வசதி வாய்ப்புக்களுடன் இயங்கி வருகின்றன.

ஆனால் எமது கண்காணிப்பில் உள்ள இரண்டு முன்பள்ளிகளையே எம்மால் பராமரிக்க முடியவில்லை. குறிப்பாக உதய சூரியன் கிராமத்தில் உள்ள நகரசபையின் முன்பள்ளி அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் இயங்கி வருகிறது.

புலம்பெயர் அமைப்புகள் ஊடாகவேனும் இந்த முன்பள்ளிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேலும் அவர்கள் கேட்டுக் கொண்டனர். (4-6-30)



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நிர்வாக சபையினர் மற்றும் ஊழியர்களின் முயற்சியினால் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச்செய்கையின் நெல் புதிர் எடுப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம் - சிவசாந்தன்)

# மண்புழு உரம் உற்பத்தி தொடர்பான பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி பிரிவும் விதாதா வள நிலையமும் இணைந்து நடத்தும் மண்புழு உரம் உற்ப த்தி தொடர்பான பயிற்சிப் பட்டறை யானது நாளை மறுதினம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் பிரதேச செயலக வளாகத்தினுள் அமைந்துள்ள விதாதா வள நிலைய கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது.

நஞ்சற்ற உணவு உற்பத்திக்கான சேதனப் பசளை பாவனையினை ஊக்குவிக்கும் முகமாகவும் முறையான கழிவு முகாமைத்துவத்தினை ஏற்படுத்தும் நோக்கிலும் மற்றும் இத்துறையில் சுயதொழில் முயலுநர்களை உருவாக்கும் நோக்கிலும் இப்பயிற்சிப் பட்டறையானது நடத்தப்படவுள்ளது.

மேலும் மண்புழு உரம் உற்பத்தி தொடர்பான செய்கை முறையும் இப்பசளை உற்பத்தியினை வெற்றிகரமாக மேற்கொள்ளும் சுயதொழில் முயலுநர் ஒருவரின் தன் போன்ற தொழில் முயலுநர்களை உருவாக்குவதற்கான ஊக்குவிப்பாக தனது தொழில் அனு பவத்தினை பகிர்ந்து கொள்ளும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

எனவே இப்பயிற்சிப் பட்டறையில் ஆர்வம் உள்ள விவசாயிகள், வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை மேற்கொள்வோர்கள், இத்துறையில் சுயதொழிலினை உருவாக்க விரும்புபவர்கள் மற்றும் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்பவர்கள் கலந்து பயன் பெறுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (4-6)

# விசேட அதிரடிப் படையினர் தாக்கியதில் இளைஞர் ஒருவர் மருத்துவமனையில்

## இருவர் பொலிஸ் தடுப்புக் காவலில்

(கரணவாய்)

சிவில் உடையில் வந்த விசேட அதிரடிப்படையினர் தாக்கியதில் இளைஞர் ஒருவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் படுகாயம் அடைந்த மேலும் இரண்டு பேர் பருத்தித்துறை பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் துன்னாலை குடவத்தை பகுதியைச் சேர்ந்த ஒருவரின் டிப்பர் வாகனம் ஒன்று பிறிதொரு இடத்தில் தரித்து நின்ற சமயம் காற்சட்டை மற்றும் டீ சர்ட் அணிந்த நிலையில் சிவில் உடையில் வந்த விசேட அதிரடிப்படையினர் அவ் வாகனத்தை எடுத்துச் சென்று வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு அருகாமையில் வைத்து மணல் நிரப்பியதாக கூறப்படுகின்றது.

அச்சமயம் அங்கு திருமண நிகழ்வு ஒன்று இடம்பெற்று கொண்டிருந்த நிலையில் அங்கு நின்ற சிலர் அதனை வீடியோ ஒளிப்பதிவு செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

அச்சமயம் காற்சட்டை மற்றும் டீ சேர்ட் அணிந்த நிலையில் இருந்த சிலர் இளைஞர் ஒருவரை தாக்கியதுடன் அவரின் தொலைபேசியை பறித்து எடுத்து சோதனையிட்டபின் கொடுத்துள்ளனர்.

அப்பொழுது அங்கு நின்று இருந்தவர்கள் அவரை தாக்கியவர்களை யார் எனக் கேட்டு தர்க்கப்பட்ட போது தாம் விசேட அதிரடி படையினர் என தெரிவித்ததுடன் சீருடை தரித்த விசேட அதிரடிப்படையினரையும் வரவழைத்தனர்.

அவர்கள் அப்பகுதியில் மூவரை தாக்கியதாகவும் அதில் ஒருவர் தப்பி ஓடி வந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இருவர் விசேட அதிரடி அடிப்படையில் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக கூறி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (4-6-60)



யா/போக்கட்டி அ.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் தி. அபராஜிதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. (படம் -சுபேசன்)

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வருவார் என பிரதமகுரு அறிவித்துள்ளார். (4-6)



மலேசிய மற்றும் இலங்கை ரோட்டரிக் கழக அங்கத்தவர்களுக்கிடையிலான சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் ஜெற்வின் ஹோட்டலில் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி நகர் மற்றும் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் மலேசிய ரோட்டரிக் கழக அங்கத்தவர்களை சந்தித்து தமது எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தனர். (படம் -சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணவாளக்கோலம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் கும்பாபிஷேக தின மணவாளக் கோல உற்சவத்தை முன்னிட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு 1008 சங்காபிஷேகம் இடம்பெறும்.

மாலை 5.30 மணிக்கு திரு.ஊஞ்சல் நடைபெற்று அம்பாள் வீதி வலம் வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (4-6)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 111, யாழ்ப்பாண வீதி, வட்டாரம்-12

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் 12 யாழ்ப்பாண வீதியிலுள்ள இல.111 , ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **பீதாம்பரம் சுந்தரலிங்கம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **அல்பிறட் ஆசீர்வாதம் சந்திரசிங்கம் பெண் செல்வி தங்கசோதி** என்பவர் பிரசித்த நொத்தாரிசு KV.பாலசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 183/02.07.1947 ம் இலக்க உறுதியால் **சாமுவேல் கௌலண்ட் தம்பையா வெல்ச் கைம்பெண் ஹரித் முத்தம்மா** ஆகியவரிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனம் **ரோகான் பிரேம்நாத் தேவசகாயம்** ஆகியவர். குறித்த 183ம் இலக்க உறுதியால் குறித்த செல்வி தங்கசோதிக்கு சீதனமாக வழங்கப்பட்டது என்றும் அவர் திருமணமாகி சிறிது காலத்தில் கணவன் இறந்து விட்டார் என்றும் இத்திருமணத்தால் அவருக்கு பிள்ளைகள் எதுவுமில்லை என்றும் இவர் உயிருடன் இருக்கும் போதே தனக்கு நன்கொடை வழங்கியிருந்தார் என்றும், குறித்த நன்கொடை உறுதி தன்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றும் நாட்டில் ஏற்பட்ட வன்முறைகளாலும் இடப்பெயர்வுகளாலும் குறித்த உறுதி தொலைந்து விட்டது என்றும் இற்றை நாள் வரையில் எவ்வித இடையூறுமின்றி தன்னால் ஆட்சி செய்யப்பட்டு வரப்படுகிறது என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் 12059/16.10.2018 ம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்.

**நிம்மி சிந்தியா டி சில்வா குணசேகர** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சிவயோகம் சந்திரதேவி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 04/413/17.06.2019 ம் இலக்க உறுதியால் குறித்த **ரோகான் பிரேம்நாத் தேவசகாயம்** ஆகியவரிடமிருந்து நன்கொடையாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **நிம்மி சிந்தியா டி சில்வா குணசேகர** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **நிம்மி சிந்தியா டி சில்வா குணசேகர** ஆகியவரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(14390)

**PEOPLE'S BANK**

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.09.2021 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 25.02.2023 (சனிக்கிழமை), 26.02.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ்.ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ்.பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்.கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

**நகை மீளெடுப்பதற்கான இறுதித்திகதி : 24.02.2023**
**ஏலவிற்பனை நடைபெறும் இடம் : யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை**
**திகதி : 25.02.2023 (சனிக்கிழமை)**
**26.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)**

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்.**
**இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல : 021-222 2601 / 021-222 8602**
**தொலைநகல் : 021-222 2602**
**மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk**

(58840)

## பதவி வெற்றிடம்

❖ வெப் இயந்திர இயக்குநர்கள்
பயிலுநர்கள் (இரவுக்கடமை-ஆண்கள்)

**யாழ்.நகரிலிருந்து 5 km தூரத்துக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை**

தொடர்புகளுக்கு

**076 097 3121**

## பதவி வெற்றிடம்

❖ அலுவலக செய்தியாளர்கள் (இருபாலாரும்)
❖ முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)

உங்கள் சுயவிபரக் கோவையை

**076 636 3378**

என்ற Whats App இலக்கத்துக்கு அனுப்புங்கள்.

அல்லது

**பொதுமுகாமையாளர், வலம்புரிப் பத்திரிகை பணிமனை, இல 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு தபாலில் அனுப்புங்கள்.

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா:10 ½ சூரி, செவ் 2 இல்
உயரம்:5' 10"
தகைமை/தொழில்: BSc in QS Engineer டுபாய்
எதிர்பார்ப்பு: பட்டதாரி உள்நாடு மட்டும்
தொ.இ: B/13284

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தாரடம் 2
கி.பா:24 சூரி 5 செவ் 8 இல்
உயரம் :5' 6"
தகைமை/தொழில்: வயறிங் பிளமிங்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/13285

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 40 சூரி 10 செவ் 2 இல்
உயரம்: 5' 9"
தகைமை/தொழில்: A/L Development Officer
எதிர்பார்ப்பு: அரச, தனியார் நிரந்தர தொழில்
தொ.இ: B/13289

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: சூரி 2 செவ் 12 இல்
உயரம்: 160 cm
தகைமை/தொழில்: BSc Engineer Associate-Technical- Lead
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/13290

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 கிறிஸ்தவம் RC
நட்சத்திரம்: கேட்டை 2
கி.பா: சூரி 11 செவ் 10 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: வங்கியாளர் முகாமைத்துவ பட்டதாரி
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ: G/11846

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 3
கி.பா:36 சூரி 3 செவ் 2 இல்
தகைமை/தொழில்:நுண்கலைப் பட்டதாரி உதவி விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/11856

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா: சூரி 6 செவ் 8 இல்
உயரம்:5' 7"
தகைமை/தொழில்: Msc ஆசிரியர்
எதிர்பார்ப்பு: தகுந்தவரன்
தொ.இ: G/11857

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: 08 சூரி 5 செவ் 6 இல்
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: BA முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பட்டதாரி
தொ.இ: G/11863

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் கொழுப்பால் 5 பில்லியன் மக்களின் ஆரோக்கியம் ஆபத்தில்

## உலக சுகாதார அமைப்பு அதிர்ச்சித் தகவல்

**(ஜெனிவா)**

**உலகமெங்கிலும் ஐந்து பில்லியன் மக்கள் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் கொழுப்பு கலந்த உணவை எடுத்துக்கொள்வதன் காரணமாக இதய நோய் மற்றும் இறப்பின் விளிம்பில் உள்ளதாக உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.**

தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் கொழுப்பு மொத்தமாக நீக்கப்பட வேண்டும் என்பது தொடர்பான ஆய்வறிக்கை ஒன்று உலக சுகாதார அமைப்பால் 2022 இல் தயாரிக்கப்பட்டு தற்போது வெளியாகியுள்ளது.

இதில், தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் கொழுப்பை மொத்தமாக தடை செய்ய அரசாங்கங்கள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளது. 20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் வேதியியலாளர்களால் உருவாக்கப்பட்ட இந்த பொருளானது வெண்ணெய் போன்ற விலங்கு கொழுப்புகளுக்கு மலிவான மாற்றாக விரைவாக பிரபலமடைந்தது.

1990 காலகட்டம் வரையில் குறித்த கொழுப்பானது ஆரோக்கியமானதாகவே பரவலாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் உண்மையில் உயிரை கொல்லும் ஆபத்தான இரசாயனம் என்றே தற்போதைய ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் உணவில் அவை சேர்த்துக்கொள்ளவும் கூடாது என எச்சரித்துள்ளனர். டிரான்ஸ் கொழுப்பு உட்கொள்ளல் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் கரோனரி இதய நோயால் உலக அளவில் 500,000 அகால மரணங்கள் ஏற்படுவதாக தெரிய வந்துள்ளது.

கனடா உட்பட 43 நாடுகள் தற்போது இந்த ஆபத்தில் இருந்து பொதுமக்களை காப்பாற்ற தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக பட்டியலிட்டுள்ளது. தாய்லாந்து, இந்தியா, பிரேசில், அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் உட்பட இந்த 43 நாடுகளில் மொத்தம் 2.8 பில்லியன் மக்கள் உள்ளனர்.

2018 செப்டெம்பர் மாதத்தில் இருந்தே உணவு வகைகளில் அதிகபடியான தொழிற்சாலை தயாரிப்பு கொழுப்புகளை பயன்படுத்த கனடா தடை விதித்துள்ளது. ஆனால் 2004 இல் இருந்தே அமெரிக்காவும் டென்மார்க்கும் தடை விதித்துள்ளதுடன் உரிய கட்டுப்பாடுகளும் கொண்டுவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி)

# பிரிட்டன் முன்னாள் பிரதமர் உக்ரைனுக்கு திடீர் பயணம்



(கீவ்)

ரஷ்யா நடத்தி வரும் போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்கு பிரிட்டன் முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சன் திடீர் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

போரால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை பார்வையிட்ட போரிஸ் ஜான்சன் தலைநகர் கீவிற்குச் சென்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை சந்தித்தார். அப்போது, போரின் பாதிப்புகள் குறித்து ஜெலன்ஸ்கியிடம் போரிஸ் ஜான்சன் கேட்டறிந்ததாக கூறப்படுகிறது.

தற்போதைய பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் போரிஸ் ஜான்சனின் உக்ரைன் வருகைக்கு ஆதரவாக இருப்பதாகக் கூறப்படுகிறது. போரிஸ் ஜான்சன் பிரதமராக இருந்தபோதும் பதவிக்காலம் முடிந்தபிறகும் உக்ரைனுக்கு பலமுறை பயணம் மேற்கொண்டுள்ளார். சில நாட்களுக்கு முன்பு டாவோஸில் நடந்த உலகப் பொருளாதார மன்றத்தில் உக்ரைன் பற்றிய குழு விவாதத்தில் அவர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. (நி)

# தாய்லாந்தில் கோர விபத்து சிறுவர்கள் உட்பட 11 பேர் பலி



(பாங்கொக்)

தாய்லாந்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுவர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

அம்நாத் மாகாணத்திலிருந்து தலைநகர் பாங்கொக் நோக்கி அதிவேக நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த வான் பாதையை விட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் பயணம் செய்த ஒருவர் ஜன்னலுக்கு ஊடாக வெளியேறி உயிர் தப்பினார்.

ஆனால், ஏனையோர் வானுக்குள் சிக்கி தீக்கிரையாகி உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# பாகிஸ்தான் நீதிமன்றில் மகளை சுட்டுக்கொன்ற தந்தை

(கராச்சி)

நீதிமன்றில் இளம்பெண் மீது தந்தை துப்பாக்கியால் சுட்டார். அவரை பொலிஸார் மடக்கி பிடித்து கைது செய்தனர். பாகிஸ்தானில் பழங்குடியினர் வசிக்கும் வஜிரிஸ்தான் பகுதியைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் தனது தந்தையின் எதிர்ப்பை மீறி காதல் திருமணம் செய்து கொண்டார்.

அந்த இளம்பெண் தனது பக்கத்து வீட்டைச் சேர்ந்த டாக்டரை சமீபத்தில் வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொண்டார். இதனால் அப்பெண் மீது தந்தை கடும் ஆத்திரத்தில் இருந்தார். இளம்பெண் தனது கணவருடன் கராச்சியின் பிரபாத் பகுதியில் வசித்தார். இந்த நிலையில் காதல் திருமணம் செய்த அப்பெண் கராச்சி நகர நீதிமன்றில் தான் சுதந்திரமாக திருமணம் செய்து கொண்டதை உறுதிப்படுத்துவதற்காக வாக்கு மூலம் அளிக்க வந்தார்.

அங்கு அவரது தந்தையும் வந்திருந்தார். அப்போது நீதிமன்ற அறையில் இளம்பெண் மீது தந்தை துப்பாக்கியால் சுட்டார். இதில் குண்டு பாய்ந்து ரத்த வெள்ளத்தில் இளம்பெண் சம்பவ இடத்திலேயே இறந்தார். துப்பாக்கியால் சுட்ட தந்தையை பொலிஸார் மடக்கிபிடித்து கைது செய்தனர். இது தொடர்பாக பொலிஸார் தெரிவிக்கையில் கௌரவ கொலையின் பின்னணியில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தந்தை, கணவர், சகோதரர் அல்லது வேறு ஆண் உறவினர்களே உள்ளனர் எனத் தெரிவித்தார். (நி)

# இருக்கைப் பட்டி அணியாததற்கு இங்கிலாந்து பிரதமருக்கு அபராதம்

(லண்டன்)

பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் 100 இற்கும் மேற்பட்ட புதிய திட்டங்கள் குறித்து பொது மக்களிடம் சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்துவதற்காக காரில் பயணித்தபடி வீடியோ மூலம் பேசினார். அந்த வீடியோவில் ரிஷி சுனக், காரில் சீட் பெல்ட் அணியாமல் பயணித்த படி பேசும் காட்சிகள் இடம் பெற்றிருந்தன.

இது வைரலாக பரவியதுடன் பிரதமரே சீட் பெல்ட் அணியாமல் காரில் சென்றதற்கு பலரும் விமர்சித்திருந்தனர்.

அதற்காக ரிஷி சுனக் மன்னிப்பும் கோரினார். இதனிடையே சீட் பெல்ட் அணியாமல் காரில் பயணித்ததற்காக ரிஷி சுனக்கிற்கு 100 பவுண்டுகள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஐந்து மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து 16 பேர் பலி

## சிரியாவில் துயரம்

(சிரியா)

சிரியாவில் ஐந்து மாடிக் குடியிருப்பு கட்டடம் இடிந்து விழுந்ததில் 16 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவின் வடக்கு நகரமான அலெப்போவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. அந்தக் கட்டடத்தில் உள்ள வீடுகளில் சுமார் 30 பேர் வசித்து வந்தனர். தண்ணீர் கசிவு காரணமாக கட்டடத்தின் அடித்தளம் பலமிழந்து இருந்த நிலையில் ஐந்து மாடி கட்டடம் திடீரென இடிந்து விழுந்தது.

இதில் வீடுகளில் இருந்தவர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். தீயணைப்பு



படையினர் மற்றும் மீட்புக் குழுவினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இதில், இடிபாடுகளில் சிக்கி ஒரு குழந்தை உட்பட 16 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த 4 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உள்நாட்டுப் போர் நடைபெற்று வரும் சிரியாவில், அலெப்போ நகரமானது அமெரிக்க ஆதரவு குர்திஷ் படையினர் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்குள்ள பெரும்பாலான குடியிருப்புகள் தாக்குதலில் சேதமடைந்துள்ளன. அலெப்போ நகரமானது ஒரு காலத்தில் சிரியாவின் வர்த்தக மையமாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சர்வதேச சிறுதானிய வருடம் 2023
## இனை முன்னிட்டு சித்தமருத்துவமும், சிறுதானியங்களும்
## தொடர் வாரக் கட்டுரைகள்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சென்ற வாரத் தொடர்ச்சி...

Botonical Name- Panicum Sumatrense
Family-Poaceae

புன் செய்தானியமான சாமை அரிசி.

உடலில் உறு தாகசுரம் ஓடும் மே கம்போம் அடலின் உறு வாதம் அகலுங்- கடலி லுறை

ஆமை யனையபதத் தன்னமே மேனியிடுஞ்

சாமை யரிசிக்குத் தான்.

இது தாகசும்,பிரமேகம், கால்வீக்கம் இவை நீங்கும்.

சாமையை உணவாகக் கொள்ளலாம்.

சாமை அரிசியை சாதமாகச் சமைத்தும் சாப்பிடலாம். கஞ்சி காய்ச்சியும் குடிக்கலாம். சாமை உள்ளாற்றி என்பதால் உடலில் அதிகரித்த பித்தத்தைச் சுத்தப்படுத்தக் கூடியது. சாமை அரிசியை சாப்பிட்டு வர தாகம், சுரம், உடல் வாதம் ஆகியவை நீங்கும். உடலுக்கு அழகைத் தருவது சாமையின் குணம்.

சாமைச் சாதமும், கஞ்சியும் இதன் சாதத்தினால் வாதம், கோழை (கபம்)

இரத்தக்குறைவு, பாண்டு போன்றன நீங்கும்.

சாமையரிசியைக்கொண்டு கஞ்சி தாயரித்து சாப்பிட்டுவர , கழிச்சலை நிறுத்தி உடலைப் பலப்படுத்தும். சாமையரிசியிலிருந்து புக்கை போல் தயாரித்து இப் புக்கையை வீக்கங்களுக்கும் பற்றிடலாம்.

சாமைச்சோ றுண்டால் தனிவாதங் கோழைகபற்

தீமைக்கா தாரமாய்ச் சேர்சோபை-போமெத்தப்

பித்தமொடு தாதுவுமாம் பேசுமதன் கஞ்சிக்கு, முத் தோடம் போகு மொழி.

**சாமைக் கஞ்சி**

சாமை அரிசி-1/2 சுண்டு, தேங் காய்த்துருவல் -1/2 சுண்டு, பாசிப்பயறு -50 கிராம், உப்பு-அளவாக, பச்சை மிளகாய்-இரண்டு, முருங்கைக்கீரை-1/2 பிடி, வெங்காயம்-3

சாமையரிசியை உமி நீக்கிக் கொள்ளவும். பாசிப்பயிற்றை கழுவி எடுத்து பாத்திரத்தில் இடவும். முருங்கைக் கீரையை துப்பரவாக்கி கழுவி எடுத்து நறுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். பாசிப் பயறு இட்ட பாத்திரத்தில் சாமை அரிசி, துப்பரவாக்கிய வெட்டிய மிளகாய், வெங்காயம் முதலானவைகளையும் இட்டு வேக வைக்கவும். அளவாக வெந்தயம் முருங்கையிலையையும் சேர்த்துக் கொள்க.

இவை ஓரளவு வெந்ததும் தேங்காய் பாலையும் சேர்த்துக் கொள்க. வெந்ததும் அளவாக உப்புச் சேர்த்து இறக்கி பரிமாற முடியும். மிகவும் உயர்வான நிறை உணவாகும். அரிசி, பாசிப்பயறு, முருங்கையிலை, தேங்காய் பால் முதலான அனைத்தும் இவ்வுணவில் அடங்குவதனால் இவை நிறையுணவாகின்றன.

நீரிழிவு நோயாளிகள் சாமைக்கஞ்சியை தமது உணவில் சேர்ப்பது சிறப்பாகும். தேங்காய் சேர்க்காது இக் கஞ்சியை பருகலாம்.

**சாமைக் கூழ்**

சாமை- 60 கிராம்,எள்ளு- 30கிராம், சர் க்கரை-30 கிராம், பாசிப்பயறு-20 கிராம் சாமையரிசியை துப் பரவு செய்து கழுவிக்காய விட்டு மாவாக்க வேண்டும். எள்ளுத் தோலை நீக்கி கழுவிக் காய விட்டு மாவாக்கி, பாசிப் பயறைக் கழுவிக் காயவிட்டு மாவாக்கி, சாமை மா, பாசிப் பயறு மா முதலானவைகளை வறுத்துக் கொள்ளவும்.

சர்க்கரையை கரசலாக்கி ஒரு பாத்திரத்தில் கொதிக்க வைக்கவும். சாமைமா, பயத்தை மா, இரண்டையும் கொதி நீர் சேர்த்து நன்றாக கலவையாக்கவும். கொதிக்கும் வெல்லப்பாகில் மாக்கலவையை சிறிது சிறிதாக சேர்த்து கலந்து கொள்க. இவ்விதம் சேர்க்கப் பட்ட சாமைச் சேர் கலவை, எள்ளுமா முதலானவைகளை 15 நிமிடங்கள் வரையில் அடுப்பில் வைத்து வேகவிடவும்.

நன்றாக வெந்ததும் இறக்கி இக் கூழை ஆறவிடவும். குழந்தைகளிலிருந்து முதியோர் வரை யாவரும் பயன்படுத்தலாம்.

**சாமை அடை (ரொட்டி)**

1/2 சுண்டு சாமை மா, 1 சுண்டு சிவத்தப்பச்சரிசிமா, 1/2 பிடி முருங்கையிலை, 5 செத்தல் மிளகாய், 3 பச்சை மிளகாய், 1/2 தேங்காய்த்துருவல், பெரிய வெங்காயம்-1 ,அளவான - உப்பு, கரட் 100 கிராம் போஞ்சி- 5 -கறி வேப்பிலை 1 நெட்டு

சிவத்தப்பச்சரிசிமா, சாமை மா முதலானவைகளை நன்கு அரித்து எடுத்து, கரட், போஞ்சி, இல முதலானவைகளை கழுவி கரட் கிழங்கை துருவி, போஞ்சி, வெங்காயம், பச்சைமிளகாய் முதலானவைகளை சிறு துண்டுகளாகச் சீவி, ஒரு பாத்திரத்தில் போட்டு அளவாக உப்பும், நீரும் சேர்த்து பிசைந்து , 1-2 மணித்தியாலம் நன்கு சேர வைத்து மீண்டும் பிசைந்து ரொட்டியாக எடுத்துக் கொள்ளவும். மிகவும் உயர்வான நிறை உணவாகும்.

100 கிராம் சாமையிலுள்ள போசனைப் பெறுமானம் காபோவைதரேற்கு 60.9 கிராம்,கொழுப்பு 5.2 கிராம் இரும்பு 9.3 கிராம், பொஸ்பரஸ் 220 மி.கிராம் கல்சியம் 17 மி.கிராம், மகனீசியம் 114 மி.கிராம், கலோரி 329 கி. கலோரி.

(தொடரும்)

# இயற்கை நோயெதிர்ப்புக்கு சிறுதானியமும் இலைக்கறி வகைகளும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

உலகத்தை ஆட்டிப்படைக்கும் சக்தியாக தற்போது உருவெடுத்திருக்கின்ற தொற்று நோய்களுள் முதன்மையானது கொவிட்-19 வைரஸ். அதனது திரிபு தற்போது சீனதேசத்தையே நடுங்க வைத்திருக்கின்றது. பல தேசங்களிலிருந்து தருவிக்கப்பட்ட வைரஸ் எதிர்ப்பு தடுப்பூசிகள் தற்போது உருமாறி பரவிக் கொண்டிருக்கும் வைரஸிற்கு எதிர்ப்புத் தன்மையைக் காட்ட தவறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனால் எமது நாட்டில் பரவக் கூடிய சாத்தியமுள்ள வைரஸிற்கான தொற்றுதலை தவிர்ப்பதற்கு நாம் எமது அன்றாட உணவுப் பழக்கத்தை சரிசெய்து கொள்ளல் மிகவும் அவசியமாகின்றது. "உணவே மருந்து மருந்தே உணவு" என்பதற்கான அடிப்படை சாராம்சம் அதுதானே.

எம்மையெல்லாம் கலங்க வைத்த கொவிட்-19 இலிருந்து பல பாடங்களை நாம் அனைவரும் கற்றிருக்கின்றோம். இவற்றிலிருந்து எம்மை குறிப்பிட்ட தொற்று நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள சுகாதாரத்துறை பரிந்துரைக்கும் அனைத்து வழிகளையும் நாம் முழுவதுமாக கடைப் பிடித்தல் அவசியமானதாகும்.

வருமுன் காப்போம் என்னும் கருத்துப் பொதி எமக்கு என்றும் முக்கியமான வழிகாட்டலாக இருக்க வேண்டும். எந்த நோய்களிலிருந்தும் எம்மை பாதுகாத்துக் கொள்ள இதன் அவசியத்தை நாம் தெரிந்து கொள்வதுடன் அதனை கடைப்பிடித்தலும் அவசியம்.

குறிப்பாக தொற்று நோய்களைப் பொறுத்த வரை எமது நாட்டிற்குள் வந்து செல்பவர்களூடாக இவை பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். உறவுகளைத் தேடி வரும் புலம் பெயர்ந்தவர்கள், சுற்றுலாவரும் வெளிநாட்டவர்கள் என அனைவரையும் கண்காணித்து பரிசோதித்து நாட்டிற்குள் வர அனுமதித்தாலும் சில நோய்கள் இயக்கமற்று பின் வெளிக் காட்டத் தொடங்கிவிடும்.

அதனால் நாம் எப்போதும் முன்காக்கும் நடைமுறைகளிலிருந்து விடுபடக்கூடாது. அலட்சியமாக இருந்து விட்டால் விளைவு விபரீதமாகிவிடும்.

நோய்களைப் பொறுத்த வரை அதிகமானவர்களுக்கு அவரது உடல் பலவீனமடையும் போதுதான் இலகுவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, ஒருவர் சுகதேகியாக இருக்கும் போது நோய்த் தொற்று ஏற்படுவது என்பது மிகவும் குறைவு. அந்த வகையில் எமது உடலிலிருந்து எதிர்ப்புசக்தி நலிவடையும் போது சாதாரணமாக பரவும் வைரஸ் காய்ச்சல் (குறிப்பாக தற்போது பரவும் இன்புளுவென்சா வைரஸ்) எம்மைத் தொற்றிக் கொள்கின்றது.

பொதுவான இடங்களில் நாம் பயணிக்கும் போது இவ்வாறான வைரஸ்கள் எம்முள் வருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகும். சந்தை, பொது போக்குவரத்து, வணக்கத்தலங்கள், இன்றும் மக்கள் அதிகமாக

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



நெருக்கமாக கூடும் இடங்களில் இவ்வாறான தொற்றுக்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம்.

வைரஸ் தொற்றுக்களைத் தடுக்க எமது உடலை தேகாரோக்கியமாக வைத்திருக்க நாம் முயற்சிக்க வேண்டும், நாளாந்த வேலைப்பளுவில் இதற்கான நேரத்தையும் அவசியம் நாம் ஒதுக்கியே ஆக வேண்டும்.

உடற்பயிற்சி செய்வதோடு நாம் உண்ணும் உணவினை எமக்கு ஊட்டச்சத்து தரக்கூடியதான உணவாகபலவகை உணவு வகைகளைச் சேர்த்து உண்ணப் பழகிக்கொள்ள வேண்டும்.

எமது உணவு உண்ணும் நடைமுறையில் மாற்றங்களை வலிந்து கொண்டு வர வேண்டிய கட்டாயத்திற்குள் அனைவரும் தள்ளப்பட்டிருக்கின்றோம், அதற்கான வழிகள் அதிகமாக எமது வாழ்வியலில் உள்ளார்ந்து இருக்கின்றது, குறிப்பாக இலைக்கறி வகைகள் எமக்காக இயற்கை தந்த வரப்பிரசாதமாகும், கிழமை ஒன்றில் ஒவ்வொருநாளுக்கும் என இலைக்கறி வகைகள் உள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு மாவட்டத்தில்
# கிரவல் அகழப்பட்ட பகுதியில் மீள் காடாக்கல் முன்னெடுப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு புத்துவெட்டுவான் முதிரைச்'சோலை பகுதியில் கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட 54 ஏக்கர் நிலப்பரப்பில் 5773 மரக்கன்றுகள் விடியல் ஆடை தொழிற்சாலையினால் மீள் காடாக்கல் செயற்றிட்டத்தின் கீழ் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.**



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புத்துவெட்டுவான், முதிரைச்சோலை ஆகிய இடங்களில் சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் மண் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு கிரவல்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட பெரும்பாலான பகுதிகளில் மழை நீர் தேங்கியும் வெட்டை வெளியாகவும் காணப்படுகின்றன. குறித்த பகுதிகளில் கிரவல் அகழ்வுகளுக்கு அனுமதிகளை வழங்கும் போது அழிக்கப்படும் காடுகளுக்கு பதிலாக மீள் நடுகை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை மீள் நடுகை செய்யப்படவில்லை.

இந்த நிலையில் கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கி வரும் விடியல் ஆடை தொழிற்சாலையின் சமூக நலத் திட்டத்தின் மீள் காடாக்கல் திட்டத்தின் கீழ் 54 ஏக்கர் நிலப்பரப்பில் 5773 மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

குறித்த பகுதியில் இலகுவில் வளரக் கூடிய இலுப்பை, மருதம், கரந்த காயா, தேக்கு, கும்புக் ரோபரோசியா, மா, பலா போன்ற மரங்கள் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

# உலந்தைக்காடு விவசாய பண்ணைக்கு நெதர்லாந்து தூதுவர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டம் ஆழியவளை உலந்தைக்காடு எஸ்.கே விவசாயப் பண்ணைக்கு இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் நேற்று விஜயம் மேற்கொண்டார்.

எஸ்.கே விவசாயப்பண்ணையானது நெதர்லாந்தை சேர்ந்த பெண்மணி ஒருவரினால் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி விஜயத்தின் போது நெதர்லாந்து தூதுவர் குறித்த விவசாயப் பண்ணையினை நடத்தும் அதே நாட்டைச் சேர்ந்த பெண்மணியின் குறித்த விவசாய ஈடுபாட்டிற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு அவரது பண்ணையினை சுற்றிப்பார்த்து கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட தென்னை மற்றும் ஏனைய பயிர்ச்செய்கை செயற்பாடுகள் குறித்து பெருமைப்படுவதாகவும் கூறினார்.

மேலும் யுத்தத்தின் பின்னர் குறித்த பகுதியில் வாழும் மக்களுடைய இன்றைய நிலை குறித்து கேட்டறிந்து கொண்டதோடு மக்களின் வாழ்வாதார நிலை குறித்தும் அறிந்து கொண்டார்.

அதுமட்டுமன்றி குறித்த விவசாயப்பண்ணையினால் பிரதேச மக்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்து அவர்களது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்த முடியுமென்றும் இதன்போது நம்பிக்கை தெரிவித்தார். (4-6-33)



வருடாவருடம் இலங்கை புத்தாக்குநர் ஆணைக் குழுவினரால் நடத்தப்படும் பாடசாலை மாணவருக்கான "சஹசக் நிவ மும்" எனும் பெயரில் நடத்தப்படும் தேசிய புத்தாக்கப் போட்டியின் 2022 ஆம் ஆண் டுக்கான முடிவுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன.

இதன்படி வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி ரூபிகா அருந்தவம் வெள்ளிப்பதக் கத்தைப் பெற்றுள்ளார்.

(படம்:-சிவசாந்தன்)

# வீதியை புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளத்தில் இருந்து அக்கராயன் நோக்கிய வீதியின் புனரமைப்புகள் நடைபெறாமலே உள்ளது என அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் பெயர்ப் பலகை நாட்டப்பட்ட போதிலும் இவ்வீதி வேலைகள் இடம்பெறாமலே உள்ளன.

அம்பலப்பெருமாள்குளத்தின் வான் பகுதியில் இருந்து அக்கராயன் நோக்கி மூன்று கிலோமீற்றர் தூரம் புனரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் வீதி புனரமைக்கப்படாமலே உள்ளது. 1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பலப்பெருமாள்குளம் குடியேற்றத் திட்டத்தில் அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட வேண்டி உள்ளது.

இக்கிராமத்தில் அபிவிருத்திகள் செய்யப்படும் என பெயர்ப் பலகைகள் நாட்டப்பட்டு அத்திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்படும் நிலை அல்லது நிதி திரும்பிச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

தற்போது இக்கிராமத்தில் 115 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் குறித்த வீதியினை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-316)

# நெல்லை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுங்கள்
## விவசாயிகள் கோரிக்கை



(கருமபுரம்)

கிளிநொச்சியில் அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்த முடியாமையால் களஞ்சியப்படுத்துவதற்காக வீதியில் காய விடப்பட்ட நிலையில் மழை காரணமாக நனைந்துள்ளது என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெல் அறுவடை ஆரம்பித்திருக்கின்றது.

நெல்லுக்குரிய நியாய விலை கிடைக்காமையால் அறுவடை செய்கின்ற நெல்லை நியாய விலை கிடைக்கும் என்ற ரீதியில் போதிய நெல் காய விடும் தளம் இன்மையால் விவசாயிகள் வீதிகளிலே நெல்லை உலர விடுகின்றனர்.

குஞ்சுப்பரந்தன் விவசாயிகள் பூநகரி பரந்தன் வீதியில் நெல்லை உலரவிட்ட போது மழை காரணமாக நெல் அனைத்தும் நனைந்துள்ளது.

எனவே அரசாங்கம் விரைவில் நெல்லை உரிய விலையில் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (4-6-316)

# யாழ்.அரச அதிபரை சந்தித்தார் நெதர்லாந்து தூதுவர்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் போனி ஓபார்க் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இச் சந்திப்பின்போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நெதர்லாந்து தூதுவர், "வடக்கு மாகாணத்தின் அழகு என்னை மிகவும் கவர்ந்துள்ளது. வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடினேன்" எனத் தெரிவித்துள்ளார்.(4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 117

# நீங்காத அன்பு



உயர் கல்வியின் நிமித்தமாக இந்தியா சென்றிருந்த ஈழநிலவன் படிப்பினை முடித்துக்கொண்டு தனது ஊருக்கு போவதற்கு விமானத்தில் ஏறினான்.

இந்தியாவில் இருந்து புறப்பட்ட விமானம் மெல்ல மெல்ல கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தது. அவன் வெளியே வந்ததும் அவனை அழைப்பதற்காக வந்த அம்மா, அப்பா, அண்ணா, அண்ணி என அனைத்து குடும்ப உறவினர்களுடன் விமானநிலையத்தைவிட்டு வெளியே வந்தான். சுற்றியிருந்த அனைத்துமே அவனுக்குப் புதிதாகத் தெரிந்தது.

அவனின் அண்ணன் மகனோடு விளையாடியபடியே வந்தானே யொழிய வேறு எதைப்பற்றியும் அவனது சிந்தனை ஓடவில்லை. கொழும்பிலுள்ள விடுதி ஒன்றில் சிறிதுநேரம் இளைப்பாறிய பின் யாழ்ப்பாணம் நோக்கிப்புறப்பட்டனர்.

பழகிய இடமாக இருந்தபோதும் ஏதோ தெரியாத ஊருக்குப் போவது போலவே அவனது செயற்பாடுகள் இருந்தன. சொந்த வீட்டிற்கு வந்து இரண்டு மணிநேரம் கடந்துவிட்டது. நாளை மறுநாள் அவனுக்குத் திருமணம். மனைவியாகப்போகும் தேன்மொழியை புகைப்படத்தில் மட்டுமே பார்த்தான். அதைத்தாண்டி அவளுடன் தொடர்புகொள்ள வேண்டும் என அவன் எண்ணியதே இல்லை. பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது ஏற்பட்ட அந்த விபத்திற்குப்பின் முன்னைய நினைவுகளும் அவனைவிட்டுப் போய்விட்டன. மனஆழத்தில் புதைந்திருந்த நினைவின் சாரல்களும் மறந்துவிட்டிருந்தது அவனுக்கு.

"கலகலவென இருந்த நீ இப்பிடி இருக்கிறியே" என அம்மா அடிக்கடி ஆதங்கப்படுவதுண்டு. ஆனால் அவனால் மட்டும் ஏனோ பத்து வருடங்களுக்கு முந்தைய ஈழநிலவனாய் மாறவே முடியவில்லை.

வீட்டின் பின்புறம் இருந்த அறையில் நுழைந்த ஈழநிலவன் அழகாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த தூசு படிந்திருந்த புத்தகங்கள், கொப்பிகளைப் புரட்டிப் பார்த்தான். கொப்பிகளின் பின்மட்டைகளில் எழுதப்பட்டிருந்த கவிதைகள் ஏதோ ஒரு செய்தி சொன்னது. வேறொரு புத்தகத்திற்குள் இருந்த புகைப்படங்கள் சிலவற்றை எடுத்து ஆவலுடன் பார்த்தபோதுதான் கையில் வந்தது நாட்குறிப்பேடு. அது தன்னை நிலைகுலையைச் செய்யப்போவதை அறியாமல் கையில் எடுத்துப் பக்கங்களை விரித்துப் பார்த்தவன் அதிர்ந்து போனான்.

கானகி என்ற பெண்ணைப்பற்றி வரிக்குவரி அவன் எழுதிய கவிதைகள் அதில். இன்றுதான், என் காதலை அவளிடம் சொல்லப்போகிறேன் என்பது வரை அதில் கவிதையாகவே எழுதியிருந்தான். "இந்த அளவிற்கு ஒரு பெண்ணைக் காதலித்துவிட்டு இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்வதா?" என எண்ணியவன் நல்ல வேளையாக ஒரு புகைப்படத்தின் பின்பக்கத்தில் நண்பர்களின் பெயர்களை எழுதியிருந்தான். மடிக்கணனியை எடுத்தவன் முகநூலில் அந்தப் பெயர்களைத் தேடி நட்பாகி தன் விபரம் கூறி தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுக் கொண்டான். தன் நிலையைக் கூறி தன்னைப்பற்றிய விடயங்களை நண்பர்களிடம் கேட்டு கானகி மீது தான் கொண்டிருந்த ஆழமான அன்பினையும் அறிந்துகொண்டான்.

உடனே அவனுக்கு ஆறுதல் கூறிய நண்பர்கள் பல முகநூல் நண்பர்களின் மூலம் கானகி பற்றிய விடயங்களை அறிந்துகொண்டனர். பல்கலைக்கழகத்தில் படித்தபோது கானகி ஒரு ஏழை மாணவி. ஆனால் இன்று அவள் பிரபல நரம்பியல் மருத்துவ நிபுணர். அவள் ஒரு ஆதரவற்றோர் இல்லத்தையும் நடத்திக்கொண்டிருந்தாள் என்ற விபரம் அறிந்ததும் உடனே ஈழநிலவனையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டனர் நண்பர்கள் அனைவரும். தனக்கிருந்த அன்பு அவளுக்கும் இருந்ததா என்பது தெரியாததால் அந்த நாட் குறிப்பையும் கையில் எடுத்துக் கொண்டான்.

மாலை ஆறு மணியிருக்கும். சிறார்களுடன் அமர்ந்திருந்து தானும் ஒரு சிறுமியாக விளையாடிக் கொண்டிருந்தவள், திடீரென பத்து ஆண்டுகளுக்கு முன்னைய நண்பர்களைக் கண்டதும் அவசரமாய் எழுந்து கொண்டாள். யாருடைய நினைவுகளைத் தவிர்க்க எண்ணி நண்பர்களிடம் இருந்தே விலகினாளோ அவனே நேரில் வந்துநின்றதும் ஆடிப்போனாள். நண்பர்கள் விடயத்தைப் போட்டு உடைக்க கண்ணீரோடு நிமிர்ந்தவள் அவசரமாய் ஓடி உள்ளே சென்ற கானகி அவசர அவசரமாய் தனது அலுமாரியில் தேடி எடுத்து அவனிடம் நீட்டியது பத்து வருடங்களுக்கு முன்னைய தனது நாட்குறிப்பேடு. பக்கங்களை அவசரமாய் புரட்டியவன் கண்ணீரோடு நிமிர்ந்தான். விழிநீரால் நிறைந்த நயனங்கள் பேசிக்கொண்டன. காவியமாய் வாழும் தம் காதலை.

# வெளிநாடு செல்லும் பேராசிரியர்களுக்கு நிதி வழங்குவதை நிறுத்தியது நிதியமைச்சு

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பு

(கொழும்பு)

முதுகலை படிப்பு மற்றும் பயிற்சிக்காக வெளிநாடு செல்லும் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு விமான டிக்கெட் மற்றும் இதர வசதிகளுக்கு பணம் வழங்குவதை நிதி அமைச்சு நிறுத்தியுள்ளது.

இதனை நிதியமைச்சு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலைகாரண மாக அனைத்து அரச நிறுவனங்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் பொருந்தும் எனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏழு வருடங்கள் தொடர்ச்சியாகப் பணி புரியும் ஆசிரியர்களுக்கு முதுகலைப் படிப்பு அல்லது பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஓராண்டு விடுமுறை வழங்கப்படும் எனவும், வெளிநாடு செல்லும் ஆசிரியர்களுக்கு விமான பயணச் சீட்டு போன்ற வசதிகள் வழங்கப்படும் எனவும் அவர் களது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இருந்த போதிலும் அந்த வசதிகளை வழங்காமல் இருப்பது மனித உரிமை மீறல் என்றும் இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் நிதியமைச்சு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடியிருந்தால் அது சாதகமான நிலையை எட்டியிருக்கும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். (நி)

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கறுப்பு வாரம் அனுஷ்டிப்பு



(கொழும்பு)

மருந்து தட்டுப்பாடு, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, அரசாங்கத்தின் தன்னிச்சையான வரிக் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் கறுப்பு வாரமாக நேற்று திங்கட்கிழமை முதல் நாளை மறுதினம் 27 ஆம் திகதி வரையில் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

மேலும் நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு தாம் முன் நிற்பதாகவும் இது தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனத்திடம் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க தெரிவித்துள்ளது. (நி)

# உயர்தரப் பரீட்சை கொடுப்பனவை அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர (உ/த) பரீட்சை தொடர்பான கடமைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு தற்போது வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், "கல்வி அமைச்சர் பரீட்சை தொடர்பான கடமைகளுக்காக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும் என்று பல சந்தர்ப்பங்களில் கூறினார். ஆனால் இன்றுவரை அதிகரிக்கவில்லை.

உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகி பரீட்சை நிலையங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

அதனைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கின்றோம்" என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கல்கியின்

# பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர்

85





அவனைத் தடுக்க யாராலும் முடியவில்லை. அவன் புகுந்து சென்ற வழியெல்லாம் இருபுறமும் பகைவர்களின் உடல்கள் குவிந்து கொண்டேயிருந்தன.

ஆம் இந்த அதிசயத்தைப் பார்ப்பதற்காகப் பின்வாங்கிய வீரர்கள் பலரும் முன்னால் வந்தார்கள். விஜயாலயனுடைய அமானுஷ்ய வீரத்தைக் கண்டு முதலில் சிறிது திகைத்து நின்றார்கள். பிறகு ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக் கொண்டு தாங்களும் போர்முனையில் புகுந்தார்கள். அவ்வளவுதான் தேவி ஜயலக்ஷ்மியின் கருணா கடாட்சம் இந்தப் பக்கம் திரும்பி விட்டது.

பல்லவர் படைத் தலைவர்கள் பின்வாங்கிக் கொள்ளிடத்துக்கு வடகரை போகும் யோசனையைக் கைவிட்டார்கள். மூன்று வேந்தர்களும் தமக்குரிய மூலபல வீரர்கள் புடைசூழப் போர்முனையில் புகுந்தார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் பாண்டிய வீரர்கள் பின்வாங்கத் தொடங்கினார்கள். கங்க மன்னன் பிரதிவீபதி அன்றைய போரில் செயற்கரும் செயல்கள் பல புரிந்த பிறகு, தன் புகழுடம்பை அப்போர்க்களத்தில் நிலைநாட்டி விட்டு வீர சொர்க்கம் சென்றான். அத்தகைய வீரனுடைய ஞாபகார்த்தமாக அப்போர்க்களத்தில் வீரக்கல் நாட்டினார்கள். பிறகு பள்ளிப்படைக் கோயிலும் எடுத்தார்கள்.

அத்தகைய கொடூரமான பயங்கர யுத்தம் நடந்த ரணகளம் சில காலம் புல் பூண்டுகள் முளையாமல் கிடந்தது. அந்தப் பக்கம் மக்கள் போவதேயில்லை. சிறிது காலத்துக்குப் பிறகு அங்கே காடு மண்ட ஆரம்பித்தது.

பள்ளிப்படைக் கோவிலைச் சுற்றிக் காடு அடர்ந்தது, புதர்களில் நரிகள் குடிபுகுந்தன. இருண்ட மரக்கிளைகளில் ஆந்தைகளும் கோட்டான்களும் வாசம் செய்தன. நாளடைவில் அப்பள்ளிப் படைக் கோயிலுக்கு யாரும் போவதை நிறுத்தி விட்டார்கள். எனவே, கோயிலும் நாளுக்கு நாள் தகர்ந்து போய் வந்தது. நமது கதை நடக்கும் காலத்தில் பாழடைந்து கிடந்தது.

இத்தகைய பாழடைந்த பள்ளிப் படைக் கோயிலுக்கு இருட்டுகிற நேரத்தில் ஆழ்வார்க்கடியான் வந்து சேர்ந்தான். அக்கோயிலின் மேல் மண்டப விளிம்பில் அமைந்த காவல் பூதகணங்கள் அவனைப் பயமுறுத்தப் பார்த்தன.

ஆனால் அந்த வீர வைஷ்ணவ சிகாமணியா பயப்படுகிறவன்? பள்ளிப்படைக் கோயில் மண்டபத்தின் மீது தாவி ஏறினான். மண்டபத்தின் மீது கவிந்திருந்த மரக்கிளையின் மறைவில் உட்கார்ந்து கொண்டான்.

நாலாபுறமும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் அடர்த்தியான இருளைக் கிழித்துக் கொண்டு பார்க்கும் சக்தியைப் பெற்றிருந்தன. அவனுடைய செவிகளும் அவ்வாறே மிக மெல்லிய இசையையும் கேட்கக்கூடிய கூர்மை பெற்றிருந்தன.

இருட்டி ஒரு நாழிகை இரண்டு நாழிகை மூன்று நாழிகையும் ஆயிற்று. சுற்றிலும் சூழ்ந்திருந்த அந்தகாரம் அவனை அடியோடு அமுக்கி, மூச்சுத்திணறச் செய்தது. அவ்வப்போது காட்டு மரங்களினிடையே சலசலவென்று ஏதோ சத்தம் கேட்டது.

அதோ ஒரு மரநாய் மரத்தின் மேல் ஏறுகிறது! அதோ ஒரு ஆந்தை உறுமுகிறது! இந்தப் பக்கம் ஒரு கோட்டான் கூவுகிறது! மரநாய்க்குப் பயந்து ஒரு பறவை சடசடவென்று சிறகை அடித்துக் கொண்டு மேல் கிளைக்குப் பாய்கிறது. அதோ, நரிகள் ஊளையிடத் தொடங்கி விட்டன.

தலைக்கு மேலே ஏதோ சத்தம் கேட்டது. அண்ணாந்து பார்த்தான்; அணிலோ, ஓணானோ, அல்லது அத்தகைய வேறொரு சிறிய பிராணியோ மரக்கிளைகளின் மீது தாவி ஏறிற்று.


மரக்கிளைகளின் இடுக்குகளின் வழியாக வானத்தில் ஒரு சிறு பகுதி தெரிந்தது. விண்மீன்கள் 'முணுக்', 'முணுக்'கென்று மின்னிக் கொண்டு கீழே எட்டிப் பார்த்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்



### குதிரைக்குத் தூண்டில்

(நேற்றைய தொடர்ச்சி)

அது தலை எடுத்து கால் உதறி, துள்ளிக் கொண்டு நிற்பதாக அவனுக்குத் தோன்றியது. அடுத்த கணமே அது எங்கே தண்ணீரை விட்டுத் தன் மீது பாய்ந்துவிடுமோ என்று பயந்து காலைக்கூட கழுவ முடியாமல் அங்கிருந்து ஓட்டமாக ஓடி மடத்தை அடைந்தான்,

பதறிக் கொண்டு ஓடி வந்தவனைப் பார்த்த பரமார்த்த குரு பகலிலேயே எதைப் பார்த்துப் பயந்தானோ என்று பரிவுடன் விசாரித்தார், மிலேச்சன், தான் ஏரி நீரில் கண்ட குதிரையைப் பற்றிக் கூறினான். அதைக் கேட்டதும் அவர்கள் அத்தனை பேருக்கும் ஆர்வம் அதிகரித்தது. எல்லாரும் ஓடிப் போய் எரி நீரில் பார்த்தார்கள்.

"அட ஆமாம்! மிலேச்சன் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை தான்!" என்று அதிசயித்தார்கள். மட்டி பொது வாகத் தண்ணீருக்குள் இறங்கக் காலை எடுத்தான், அப்போது அந்தப் பக்கமாக ஒரு பெரிய தவளை தத்திக் குதித்தது, அதையடுத்து பல தவளைகள் தண்ணீரிலும் தரையிலும் இருந்ததைப் பார்த்தான். அவனுக்குப் பயமாகி விட்டது. "தண்ணீரில் இறங்கினால் தவளைகள் கடித்து விடும்" என்றான் நடுங்கிக் கொண்டு. மற்றவர்களும் "ஆமாம், ஆமாம்" என்று பயந்து தள்ளி நின்று கொண்டார்கள்.

'இந்தக் குதிரையைப் பிடிக்க வேண்டுமே, இது குருதேவருக்கு ஏற்ற குதிரையாகவே இருந்தது. விலை கொடுக்கும் செலவு இல்லாமாலும் இருக்கும், பிடித்துவிட வேண்டும்,

அவர்கள் தீவிரமாக யோசித்தார்கள், ஆளுக்கு ஒரு யோசனை கூறினார்கள், "குதிரைக்குப் பிடித்தது கொள்ளு அல்லவா! கொள்ளைப் பார்த்தால் குதிரை கொள்ளை ஆசையோடு வாயைத் திறக்குமே" என்றான் மடையன்.

"ஆமாம்... கொள்ளைக் காட்டினால் அதைத் தின்ன வாயைத் திறந்து கொண்டு மேலே வரும். அப்போது பிடித்து விடலாமே சுலபமாக!" என்றான் மூடன். "பச்சைப்புல் என்றா லும் குதிரைக்கு ஆசை தானே, ஆகவே பச்சைப் புல்லைத் தண்ணீருக்கு மேலே காட்டினால் அதைத் தின்னத் தாவிக் கொண்டு மேலே வரும்" என்றான் பேதை,

"ஆமாம்... அப்போது 'கபக்' என்று பிடித்துக் கொள்ளலாம். எல்லாரும் சேர்ந்து" என்றான் மிலேச்சன். "ஏன்... எந்தக் கஷ்டமும் இல்லாமல் இப்படிச் செய்யலாமே!" என்று ஆரம்பித்தான் மட்டி. "எப்படி?" கேட்டான் மடையன். "நாம் கரை மேலிருந்து கொண்டே குதிரை கனைப்பதைப் போல் கனைத்தால், இந்தக் குதிரை மேலே வரும், தன் ஜாதி மிருகங்களோடு சேர்ந்து கொள்ள ஆசையிருக்குமே! மேலே வந்ததும், ஒரே சமயத்தில் நாம் ஓடிப் போய் சரியாக அமுக்கிப் பிடித்துக் கொள்ளலாமே" என்றான் மட்டி.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு.
அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.
– சிம்மன்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# பொதுமக்களை அலைக்கழிப்பதுதான் அரச பணியின் கௌரவம் என்றாயிற்று

ஆத்மிக சிந்தனையோடு வாழ்ந்த நம் தமிழ் இனத்தில் இன்று அராஜகமும் சண்டித்தனமும் கர்வமும் தலைக்கேறி நிற்கிறது.

இதை நாம் கூறும்போது, கற்றறிந்த சமூகத்துக்கு இது பொருந்தாது என்று யாரேனும் கூறலாம்.

ஆனால் அது உண்மையன்று.

ஆம், அரச நிறுவனங்களில் கடமை புரிகின்ற அதிகாரிகள் உள்ளிட்ட பணியாளர்களில் ஒரு பகுதியினர் அடக்கமான அராஜகத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

பொதுமக்களை அதட்டுவது, தாம் நினைத்த பாட்டில் நடப்பது, பொதுமக்களை இம்மியும் மதிக்காமல் கதைப்பது என்ற அக்கிரமம் ஒவ்வொரு அரச அமைப்புகளிலும் தாராளமாக நடந்தாகிறது.

எனினும் இதுபற்றி யாரும் கவனிப்பதாக இல்லை.

இதற்குக் காரணம் அரச சேவையில் இருப்பவர்கள், செல்வந்தர்கள், வர்த்தகர்கள், செல்வாக்குடையவர்கள் மற்றும் சர்வதேச பொது அமைப்புகளில் அங்கம் பெற்றிருப்பவர்கள் தங்களின் தேவைகளை மிகச் சுலபமாகச் செய்து முடிக்கின்றனர்.

மேற்போந்தவர்களின் காரியம் என்றதும் அரச பணியாளர்கள் எழுந்து நின்று அதனைச் செய்து கொடுக்கின்றனர்.

இதற்கு மேலாக, சண்டித்தனம் உடையவர்களின் காரியங்களையும் காலம்தாழ்த்தாது அரச உத்தியோகத்தர்கள் அடக்கமாகச் செய்து முடிப்பர்.

மற்றும்படி பண்புமிக்கவர்கள், அமைதியாக வாழ்பவர்கள், ஆன்மிக நாட்டமுடையவர்கள், எதிர்த்துக் கதைக்கத் தெரியாதவர்கள் என்றால்போதும், இருந்த இடத்தில் இருந்து கொண்டு அவர்களைத் துரத்துவதில் – அவர்களை அலைக்கழிப்பதில் அரச பணியாளர்களில் ஒரு தரப்பினர் மும்முரமாக ஈடுபடுகின்றனர்.

இதை நாம் கூறும்போது, கண்ணியத்துடனும் கடவுள் விசுவாசத்துடனும் இது தங்களின் பணி என்ற கடமை உணர்வுடனும் சேவையாற்றுகின்ற எத்தனையோ அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் நம் மத்தியில் உள்ளனர் என்ற உண்மையை எவரும் மறந்துவிடலாகாது.

ஆம், நாம் இங்கு பிரஸ்தாபிப்பவர்கள் தர்மம் அறியாதவர்கள். மக்களை அலைக்கழிப்பதுதான் தமது அரச பணிக்குக் கௌரவம் என்று நினைப்பவர்கள். திமிர் பிடித்தவர்கள். நேர்மையற்றவர்கள். பண்புடைமை மிக்க கல்வியைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் என்பதுதான் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இங்குதான் ஓர் உண்மையை நாம் கூறுவது அவசியமாகிறது.

அதாவது, எத்தன்மையர் அரச சேவையில் இணைந்து கொண்டாலும் பொது நியதியின் அடிப்படையில், அவர்கள் பொதுமக்களுக்குச் சேவையாற்றுவதை அந்தந்த பதவிநிலை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

தவிர, பொதுமக்களை அலைக்கழிப்பதானது நீங்களே உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் வாழ்மானத்தைத் தேடுகின்றீர்கள் என்ற நீதிக்கோட்பாட்டை எடுத்துரைத்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

இல்லையேல் பொதுமக்களின் திட்டலும் அவர்களின் மனவேதனையும் நிச்சயம் கன்மவினையாய் மாறும். கவனம்.

# க.பொ.த உயர்தர பரீட்சை காலத்தில் மின்வெட்டு அமுல்

## விளக்கம் கோரியது மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

க.பொ.த உயர்தர பரீட்சை காலத்தில் மின் விநியோகத்தை தடை செய்யாமல் இருக்க தவறியது ஏன்? என விளக்கமளிக்குமாறு மின்சக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

உயர்தர பரீட்சை நடைபெறும் ஜனவரி 23 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரை மின்வெட்டைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த 23 ஆம் திகதி மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவருக்கு அறிவித்திருந்தது.

ஆனால் இரு தரப்பிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அவதானித்துள்ளது. இதன்படி, சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக ஜனவரி25 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் இலங்கை மனித உரிமைகள்ஆணைக் குழுவினால் நடத்தப்படும் விசாரணையில் பங்கேற்குமாறு இரு தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# 72,002 சுற்றுலாப் பயணிகள் இவ் வருடம் வருகை

(கொழும்பு)

இந்த வருடத்தில் இது வரை 72,002 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

ரஷ்யா, இந்தியா, ஜேர்மனி, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்தே பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

மாதத்தின் 21 நாட்களில் ரஷ்யாவிலிருந்து 17,474 சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவிலிருந்து 9,181 பேரும், ஜேர்மனியிலிருந்து 6,269 நபர்களும், பிரித்தானியாவிலிருந்து 5,933 பேரும், பிரான்சிலிருந்து 3,342 நபர்களும் வந்துள்ளதாக தெரிவித்துள்ளது. (ம-7)

# தொடர்ந்து படிக்க வேண்டாம்

## பரீட்சைக்கு சென்ற மாணவிக்கு அசிட் பருக்க முயன்ற காதலன்

(கொழும்பு)

கேகாலை நகரில் உள்ள பரீட்சை நிலையமொன்றில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை மாணவி ஒருவரை இளைஞன் வழிமறித்து அசிட் குடிக்குமாறு பலவந்தப்படுத்தியதில் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உடன் இருந்த சிறுமியின் தந்தை மற்றும் சந்தேக நபருக்கும் தீக்காயம் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த சிறுமி, அவரது தந்தை மற்றும் இளைஞன் ஆகியோர் கேகாலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பாடசாலை மாணவி தனது தந்தையின் முச்சக்கர வண்டியில் பரீட்சை நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த அவரது காதலன் அவர்களை வழிமறித்து மாணவியின் கழுத்தைப்பிடித்து அசிட்டை பருக்கியுள்ளார்.

21வயதுடைய மாணவி கேகாலை உடுமாகம பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அந்த இளைஞன் கேகாலை நகரை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது மகள் அந்த இளைஞனை காதலித்து வந்ததாகவும், அதற்கு இரு தரப்பினரின் பெற்றோரும் சம்மதம் தெரிவித்ததாகவும், ஆனால் யுவதியை தொடர்ந்து படிக்க வேண்டாம் என்று காதலன் பலமுறை எச்சரித்ததாகவும் மாணவியின் தாய் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

அவரது தேவையற்ற தலையீட்டை பொறுத்துக் கொள்ள முடியாத மகள் அவருடனான உறவை கைவிட முடிவு செய்ததாக அவர் கூறினார். (ம-7)

# வழக்கு விசாரணைக்காக

## யாழிற்கு வருகை தரவுள்ள தமிழக மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழகம் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதியாழ்ப்பாணம்வருகை தரவுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய போது, கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்ட போதிலும் அவர்களின் படகு தொடர்பான விசாரணை இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு வழக்கு விசாரணைகள் இடம்பெறும் படகுகளின் உரிமையாளர்களும் இராமேஸ்வரம் விசைப்படகுச் சங்கத்தின் பிரதிநிதிகளுமாக சுமார் 10 பேர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# லொறியிலிருந்து தவறி விழுந்த 11 மாணவர்கள் காயம்

(கொழும்பு)

ஹுனுமுல்ல மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு விட்டு லொறி ஒன்றில் வீடு திரும்பிக் கொண்டிருந்த 11 பாடசாலை மாணவர்கள் கெலபிட்டிமுல்ல பிரதேசத்தில் லொறியில் இருந்து தவறிவிழுந்து காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்த 11 மாணவர்கள் திவுலப்பிட்டி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலை முடிந்து வீடு செல்வதற்காக லொறியில் ஏறிய மாணவர்கள் லொறி வளைவில் திரும்பிய வேளை, தவறி விழுந்ததாக சகமாணவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7)

# இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி சந்தேகமே!

## ஹிந்துஸ்தான் டைம்ஸ் செய்தி வெளியீடு

(கொழும்பு)

நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு சீனா உதவியை வழங்க முன்வந்தபோதும், இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் உதவி குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று ஹிந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

முன்னதாக, இலங்கையின்நெருக்கடிக்குத்தீர்வைத் [illegible] சர்வதேச நாணய நிதியத்திற்குக் கடிதம் எழுதியது.

அதில், இலங்கைக்கு நிதியுதவி மற்றும் கடன் நிவாரணத்துடன் ஆதரவளிப்பதாக உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி இலங்கைக்கு அதன் கடனுக்காக இரண்டு வருட கால அவகாசம் வழங்கியுள்ளதாக அறிவித்திருந்தது.

இந்த கடிதம் ஜனவரி 19ஆம் திகதி இலங்கையின் நிதியமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனினும் சீனாவின் இந்த நிலைப்பாடு, சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலை உடனடியாகப் பெறுவதற்கு இலங்கைக்கு போதுமானதாக இருக்காது என தொடர்புடைய தரப்புக்களைக் கோடிட்டு ஹிந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித்துள்ளது. (ம-7)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் அருள்மிகு சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில் மஹோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களின் இடமாற்றங்கள் ரத்து!

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**(கொழும்பு)**


**உள்ளூராட்சிசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அரச சேவையில் இடமாற்றங்கள் செய்யப்பட முடியாது என தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.**

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற வுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் இடமாற்றங்கள் செய்யப்பட வேண்டுமாயின் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்து அதன் அனுமதியுடன் மட்டுமே இடமாற்றம் செய்ய முடியும்.

தேர்தல் தொடர்பில் சகல சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தேர்தல் முடியும் வரையில் இந்த சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படும் என குறிப்பிட்டுள்ளார். (நி)



# 60 கிலோ கஞ்சா அனலைதீவில் மீட்பு



(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அனலைதீவு பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 60 கிலோ எடையுள்ள கேரளக் கஞ்சா நேற்று மீட்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஊர்காவற்றுறை பொலிஸாரால் இந்த மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கஞ்சா பொதிகள் இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளது. (4-6-30-104)

# தேயிலை ஏற்றுமதி மூலம் கடந்த ஆண்டு அதிக வருமானம்

(கொழும்பு)

தேயிலை ஏற்றுமதி மூலம் கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் வரை 411.9 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் முழு வருடத்திலும் கிடைக்கப்பெற்ற அதிகூடிய வருவாய் இது என தேயிலை ஏற்றுமதி தரப்பினர் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு தேயிலை ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையில் 147.74 பில்லியன் ரூபாய் அதிகம் என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இலங்கை தேயிலையை அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடாக ஈராக் காணப்படுகிறது.

ரஷ்யா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் இலங்கை தேயிலையை இறக்குமதி செய்வதில் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. (நி)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை பன்றிக்கேணி கந்தசுவாமி கோயில் புனருத்தாரனம் செய்யப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

அதனை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாற்றும் நிகழ்வும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை மகா கும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளன. (4-6)

# போலி கையொப்பத்துடன் வேட்புமனு தாக்கல்

(கொழும்பு)

தனது கையொப்பத்தை போலியாகப் பயன்படுத்தி தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தெஹிவளை - கல்கிசை மாநகர சபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரின் கையொப்பத்தை போலியாகப் பயன்படுத்தி வேட்புமனுவைச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (நி)

# யாழில் வீணை: மட்டக்களப்பில் படகு



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் வீணை சின்னத்திலும் மட்டக்களப்பில் படகு சின்னத்திலும் போட்டியிடுவதாக முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்று நேற்று செவ்வாய்க்கிழமை வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 252 உள்ளூராட்சி சபைகளில் நேரடியாக மொட்டு சின்னத்தில் போட்டியிடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலினை ஒத்திவைப்ப தற்குரிய நடவடிக்கைளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக கூறப்படுகின்றதே என்ற கேள்விக்கு பதிலளித்த அவர்,

"நான் தற்போது ஆட்சியில் இல்லை. எனவே இதுகுறித்து நீங்கள் அரசாங்கத்திடமே கேட்க வேண்டும்" எனத் தெரிவித்தார். (நி)

# ஆற்றில் கவிழ்ந்த எரிபொருள் ஊர்தி



(புத்தளம்)

ஹலவத்தை - புத்தளம் வீதியில் பட்டுலு ஆற்றின் வழியே எரிபொருள் ஏற்றிச் சென்ற கனரக வாகனம் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக முந்தலம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் - கைத்தொழில் நகரமான காலடிக்கு எரிபொருள் எண்ணெயை ஏற்றிச் சென்ற குறித்த வாகனம் கொழும்பு நோக்கித் திரும்பும் போதே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஹலவத்தை - புத்தளம் வீதியில் பட்டுலு ஆற்றில் குறுக்கே உள்ள பாதுகாப்பு வேலியையும் உடைத்துக் கொண்டு ஆற்றில் விழுந்துள்ளது.

விபத்துக்குள்ளான ஓட்டுநரை மீட்கும் பணியில் பிரதேசவாசிகளும் பொலிஸாரும் இணைந்து செயற்பட்டுள்ளனர். சிறு காயங்களுக்கு உள்ளான சாரதி சிகிச்சைக்காக ஹலவத்த பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பட்டுலு ஆற்றின் பாலத்தின் பாதுகாப்பு வேலியும் உடைக்கப்பட்டுள்ளதுடன், ஓயாவில் உருண்டு விழுந்த கனரக வாகனம் 100 மீற்றர் தூரம் நீரினால் கொண்டு செல்லப்பட்டு ஹலவத்தை - புத்தளம் புகையிரத பாதையின் குறுக்கே உள்ள கறுப்பு பாலத்தின் அடியில் நின்றுள்ளது.

சாரதியின் நித்திரையால் இவ்விபத்து நேர்ந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 320 | 350 | 300 | 400 |
| தக்காளி | 200 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| கோவா | 80 | 80 | 100 | 120 |
| கரட் | 200 | 180 | 200 | 240 |
| பூசணி | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 150 | 220 | 180 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 650 | 500 | 600 | 600 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 200 | 400 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 250 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 160 |
| பயற்றங்காய் | 500 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 420 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 350 | 300 | 300 | 250 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1200 | 1500 |
| போஞ்சி | 200 | 250 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 200 | 200 | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 40 | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 350 | 300 | 320 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 400 | 450 |
| முள்ளங்கி | 40 | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 50 |
| ஈரப்பலா | 120 | — | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்புலன்ஸ்...

நேற்று முன்தினம் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் செம்மண்குன்று பூநகரியை சேர்ந்தவரும் செம்மண்குன்று அ.த.க பாடசாலையில் நான்காம் தரத்தில் கல்வி கற்பவருமான லோகநாதன் நிலோஜன் (வயது - 9) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறுவன் தாயாருடன் தும்புத் தொழிற் சாலைக்கு சென்று விட்டு மாலை தமது வீடு நோக்கி சென்றுள்ளார்.

அச்சமயம் மாலை 6.05 மணியள வில் வலது புறமாக இருந்த வர்த்தக நிலையத்துக்கு செல்வதற்காக வீதியை கடந்தபோது முழங்காவிலில் இருந்து பூநகரி நோக்கி சென்று கொண்டிருந்த அம்புலன்ஸ் வாகனம் மோதியுள்ளது.

இதில் மயக்கம் அடைந்த சிறுவன் அதே அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற் றப்பட்டு பூநகரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் இரவு 7.00 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி 7.30 மணி யளவில் உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற் கொண்டார். சாட்சிகளை பூநகரிப் பொலி ஸார் நெறிப்படுத்தினர். (ம-7,60,316)

## சாரதி, நடத்துநர்...

நேற்றைய தினம் காரைநகரில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அரச பேருந்தினை மறித்தே குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பேருந்து வீதியில் பயணித்த வேளை வீதியில் நின்றவர்கள் இவ் வாறு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து ஊர்காவற் றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7,104)

## 2 மணித்தியாலங்...

சர் பந்துல குணவர்தன தெரிவித்துள் ளார்.

நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக் கும்போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் காலப்பகுதியில் மின்சார துண்டிப்பு இடம்பெறாது. அதேபோல மாலை 4 மணிவரை மின்சாரம் துண்டிக்கப் படமாட்டாது.

ஆனபோதும் 4 மணிக்கு பிறகும் இரவு வேளையிலும் இரண்டரை மணி நேரம் அன்றி இரண்டு மணித்தி யாலங்கள் மட்டும் மின்சாரம் துண் டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. உயர்தரத்தில் தோற்றும் மாண வர்களை கருத்தில்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-7)

## பெப்ரவரி 4...

எமக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்க வில்லை. சிங்களப் பேரினவாத அர சின் திட்டமிடப்பட்ட இன அழிப்பு நட வடிக்கைகள் தொடர்வதால் பெப்ரவரி 4ஆம் திகதியை காலம் காலமாக தமிழர்கள் கரிநாளாக அனுஷ்டித்து வருகிறார்கள். தமிழர் தாயகப் பகுதி களில் மக்களின் பூர்வீகக் காணிகள் அபகரிப்பு, பௌத்தமயமாக்கல் என் பன இன்றுவரை புதிய புதிய வடிவங் களில் தொடர்கிறது.

போர் முடிந்து 14 ஆண்டுகள் கழிந் தும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப் படவில்லை, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை, தமிழினப் படுகொலைக்கான நீதி கிடைக்க வில்லை, காணாமல் ஆக்கப்பட்ட வர்கள் தொடர்பில் அரசு பொறுப்புக் கூறவில்லை. தமிழ் மக்களையும் சர்வ தேசத்தையும் இலங்கை அரசு ஏமாற்றி வருகிறது.

அரச படைகளால் காணாமல் ஆக் கப்பட்டவர்களின் உறவுகள், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என் பதை தேடி வருடக்கணக்காக போராடி வருகிறார்கள், தமிழ் அரசியல் கைதி கள் 10 வருடங்களுக்கு மேலாக தமது விடுதலையை எதிர்பார்த்து சிறையில் வாடுகிறார்கள், தமது பூர்வீக நிலங் களைப் பறிகொடுத்துவிட்டு இன்று வரை வீதியில் போராடி வருகிறார்கள், தமிழர் பகுதிகளில் தமிழருக்கு அனு மதி வழங்காமல் சிங்களக் குடியேற் றங்களுக்கு அனுமதி வழங்குகிறார் கள், தமது உரிமைகளுக்காக போரா டும் மக்கள் கைது செய்யப்பட்டு அச் சுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்பு தற்போது கேள்விக்குறியாகி யுள்ள நிலையில் இந்த சுதந்திர நாளை நாம் கரிநாளாக பிரகடனப்படுத்தி எமது எதிர்ப்பை இந்த அரசுக்கும் தெரி விப்பதுடன் சர்வதேசத்துக்கும் தமிழ் மக்களின் உண்மை நிலையை உரத் துக்கூற வேண்டும்.

அந்த வகையில் மாணவர்களாகிய நாம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி பாரிய மக்கள் எழுச்சி பேரணி ஒன்றை முன்னெடுக்க திட்டமிட்டுள் ளோம். அதற்கு கட்சி பேதங்களை கடந்து சகல தரப்பினரின் ஒத்துழைப் பையும் வேண்டி நிற்கிறோம்.

எமது உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்காமல் எமது இருப்பை உறுதி செய்வதற்கு நாம் போராட வேண்டும். ஆகவே பெப்ரவரி 4ஆம் திகதி தமிழர் தாயகம் எங்கும் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை புறக்கணித்து இந்த மக்கள் எழுச்சி பயணத்தில் எம்முடன் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றனர். (ம-7,33)

## சுன்னாகத்தில்...

றன.

29 வயதுடைய சுன்னாகம் பகுதி யைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப் பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட வருக்கு உடம்பில் காயங்கள் காணப்படுவத னால் வைத்திய சாலையில் சிகிச் சைக்காக அனு மதிக்கப்பட்டுள் ளார்.

அவர் விரை வில் சட்ட நட வடிக்கைக்கு உட்படுத்தப்பட வுள்ளதாக சுன் னாகம் பொலி ஸார் தெரிவித் துள்ளனர். (ம-7)

## முறை...

முடியாது, பாதீடு தோற்கடிக்கப் பட்ட ஒருவர்முதல் வராகத் தெரிவு செய்வதற்கு இடம் இல்லை, அத்தோடு உள் ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் சபையில் கோர மில்லை என அறிவித்துவிட்டு சென்று சூட்சு மமான முறை யில் வர்த்தமானி பிரசித்தமை போன்ற மூன்று விடயங்களுக்கு எதிராகவும் நேற் றைய தினம் சட் டத்தரணி மணி வண்ணனால் யாழ்.மேல் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள் ளது. (ம-7,33)

## தேர்...

நிதி அமைச்சகத் தின் செயலாள ருக்குக் கடிதம் அனுப்பியுள்ள தாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள் ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான செலவு 10 பில்லியன் ரூபாயாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பணத் தொகையை வழங்க முடி யுமா? இல்லையா? என்பதை உண்மை களுடன் தெரிவிக்குமாறு உரிய கடிதத் தில் கோரப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(ம-7)

## 12 மணி நேரம்...

நேற்று நடைபெற்ற அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபோன்று மின்சாரம் துண்டிக் கப்பட்டால் மக்கள் நிர்க்கதிக்கு ஆளாக நேரிடும் என்றும், மின் கட்ட ணத்தை உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

ஜனவரி மாதத்தில் மின்சார உற் பத்திக்காக 38 பில்லியன் நிலக்கரி செலவழிக்கப்பட்டதாகவும், இனி அவ் வாறு செய்ய முடியாது என்றும் அவர் கூறினார்.

மேலும்பணம்இல்லை, கடன்பெறமுடி யாது என்பதால் மின் கட்டண உயர்வை கண்டிப்பாக செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சர்வதேச நாணய...

அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1465
வெற்றி இலக்கங்கள்
மகரம் 4 1 3 4 2 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1040
A 32 44 48 57
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.24
சீட்டிழுப்பு இலக்கம் 3252
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
Y 47 49 55 69
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1358
R 18 18 26 47 48

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.24
சீட்டிழுப்பு இலக்கம் 319
விருச்சிகம் 10 21 46 59 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/24
சீட்டிழுப்பு இலக்கம் 5010
D 1 0 3 4 4 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1985
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.01.24
தினம் செவ்வாய்க்கிழமை
R 30 35 47 58
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை
ரூ. 4,474,580/-
DLB

செவ்வாய்க்கிழமை
சனிதா
சீட்டிழுப்பு திகதி : 2023.01.24
சீட்டிழுப்பு இல : 4146
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 4,236,780/-
வெற்றி இலக்கங்கள்
16 24 26 75
J
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 279
சீட்டிழுப்பு திகதி 2023.01.24
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள்
18 19 23
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,534,420/-
DLB

ராசி
திகதி 2023-01-24
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,984,596/-
வெற்றி வாரம் 3697
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
05 27 41 50
DLB
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,490,040/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 03 14 20 35 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 300,615,888.20
1161
2023.01.24
செவ்வாய்க்கிழமை
DLB

செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1811
சீட்டிழுப்பு திகதி : 2023.01.24
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 5,647,800/-
அத கோடிபதி
வெற்றி இலக்கங்கள்
07 45 54 74 P
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

**றோயல் நெய்**

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை
தரமான **றோயல் நெய்** கொண்டு தயாரித்த
அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.

ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.




Packed By:-
Royal Industries®
Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 567

குறிப்பு
யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து
பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும்
பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
(C-5841)



**அகரம் உயர் நிலைக் கல்லூரி**

**AHARAM HIGH STANDARD COLLEGE**

மல்லாகம் | கொக்குவில்

தரம் - 06

தமிழ் / ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கான
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
(14363) நிர்வாகி



## பொதுக்கூட்ட அறிவித்தலும் வருடாந்த ஒன்றுகூடலுக்கான அழைப்பும்

### இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் வடமாகாணம்

மேற்படி எமது தொழிற்சங்கத்தின் நிர்வாகசபை தெரிவிற்கான பொதுக்கூட்டமும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் எதிர்வரும் **11.02.2023** (சனிக்கிழமை) பி.ப **2.00** மணியளவில் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள **Green Grass Hotel** இன் **Grand Green Palace** மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே குறித்த கூட்டத்திற்கும் நிகழ்விற்கும் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புரித்துடன் கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்

நிகழ்வுகளுக்கான அனுசரணை

MASCONS
ESTD 1939
ELEPHANT | Sealcon | MASCO
+94 11 2325561 | www.mascons.com
(14392)


# இ.போ.ச. பஸ் சாரதியை குத்திக் கொன்ற நடத்துநர்

(கொழும்பு)

நீர் கொழும்பு இ.போ.ச டிப்போவின் பஸ் சாரதியாக கடமையாற்றும் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இ.போ.ச பேருந்தின் நடத்துநர் ஒருவரினாலேயே இவர் இவ்வாறு குத்தி கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த கொலை சம்பவம் தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன நேற்றையதினம் இடம்பெற்ற அமைச்சரவை செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போது இதனை கூறியுள்ளார்.

இவர்களுக்கு இடையில் பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட தகராறு காரணமாக இச்சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறியுள்ளார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



**IELTS** - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount உடன்
Basic & Advance Grammar
Classes, First Class (Free of Charge)
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (14377)



**தீபம் கல்வி நிலையம்**
இல.11 டேவிட் வீதி, யாழ்ப்பாணம்
(கலைக்கோட்டம் அருகில்)

**A/L 2024**

வர்த்தகப் பிரிவு புதியபிரிவுகள்
ஆரம்பம் - 28.01.2023 சனி
மாலை - 3.30

| | |
|---|---|
| பொருளியல் | - M.லிஜிதன் |
| கணக்கீடு | - V.தமிழ்ஈசன் |
| வணிகக்கல்வி | - B.கோபிதன் |

- A/L 2023 ற்கு ஆரம்பத் தேர்ச்சியில் இருந்து Paper Class நடைபெறுகின்றது
- தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.

சாதனையாளர்கள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகின்றனர்
077 224 7781 -நிர்வாகம் (14395)


# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதிதேவி ஞானச்சந்திரன்

தோற்றம்
27 • 02 • 1956



மறைவு
24 • 01 • 2023

வித்தகபுரம், கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் வரியப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சரஸ்வதிதேவி ஞானச்சந்திரன் 24.01.2023 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் - இராஜேஸ்வரியின் சிரேஷ்ட புதல்வியும், வயித்திலிங்கம் சரஸ்வதியின் மருமகளும், ஞானச்சந்திரனின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, றொசானாதேவி, சிவபாலதேவன், மகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மகாலிங்கம், மகேஸ்வரன், சிவகுமார் (அமரர்), ஜெனோதினி, பராசக்தி, ஜம்புகேஸ்வரன், வில்வராணி, அம்பிகாவலன் (அமரர்), குணாளன் (அமரர்), கிருபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.01.2023) இன்று புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

(14396) தகவல் :- குடும்பத்தினர்


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14393)
076 825 7716 (ஆகாஸ்)



**தீபம் கல்வி நிலையம்**
**THEEBAM EDUCATION CENTRE**
இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
(கலைக்கோட்டம் அருகில்)

கல்வியாண்டு - 2023

தரம் 6
தமிழ் மொழி மூலம்
ENGLISH MEDIUM
ஆரம்பம் 05.02.2023
ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணி

இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

- அடிப்படை ஆங்கிலம், கணிதம், சிங்களம், ICT வகுப்புக்கள் முற்றிலும் இலவசமாக நடைபெறுகின்றது.
- அனுமதிகள் வழங்கப்படுகின்றது.

ஏனைய வகுப்புகளிற்கும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதால் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றது. (14394)

தொடர்புகளுக்கு:- 077 224 7781 நிர்வாகி


இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org